Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்


மக்கள் நாளிதழ்


பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-24 | 08-08-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -172

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி.9957) T.P: 024-222 4247


## ஜேர்மனில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றும் நாகலிங்கத்திற்கு தேசியத் தலைவர் விருது வழங்கிக் கௌரவிப்பு





ஜேர்மன் நாட்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றி வரும் திரு.இரா. நாகலிங்கம் அவர்களை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

ஜேர்மன் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் மத்தியில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தாய்மொழிப் பற்றை உருவாக்கியமைக்காகவும் திரு.இரா.நாகலிங்கம் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

திரு.இரா நாகலிங்கம் அவர்கள் தாய் மண்ணில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 1979ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டுக்குச் சென்றார். புலம்பெயர்ந்தாலும் தாய் மண்ணின் நினைவோடும் தாய் மொழியின் பற்றோடும் வாழ்ந்து வந்தார். 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பத்துப் பிள்ளைகளை ஒன்றாக்கி ஜேர்மனியில் தாய்மொழியைப் போதித்தார். இதனோடு இவரது சேவை மேலும் விரிவுபட்டது.

1987ஆம் ஆண்டு தமிழர் நலன்புரிச்சங்கம் தோற்றம் பெற்றது. இதில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைகுறித்த புதியவரைவு தயாரிக்கும் முயற்சியில் சனாதிபதி சந்திரிகா

### இரகசிய முடிவுகள் சிலவும் அரசு எடுத்தது

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதியின் தலைமையிலான குழுவொன்று இடைக்கால நிர்வாகசபை குறித்த புதிய வரைவைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சில இரகசிய முடிவுகளைக் கூட்டமைப்பு அரசு எடுத்திருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.**

வடக்கு-கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அமைய வேண்டுமென விடுதலைப் புலிகள் தெரிவித்து வரும் நிலையிலேயே, இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட சில உரிமைகளை மட்டும் வழங்கும் இடைக்கால நிர்வாக சபைக்கான வரைவொன்றை அவசர அவசரமாக சனாதிபதி தலைமையிலான ஆலோசனைக் குழு தயாரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. இடைக்கால நிர்வாக அலகின் கீழ் பேச்சுவார்த்தை நடாத்த சுதந்திரக் கூட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## -போக்குவரத்தை கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த மாணவி மீது மோட்டார்சைக்கிள் மோதியது

வீதிப்போக்குவரத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிளால் மோதிய இளைஞர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வேளையில் பிரதான வீதியில் மடத்தடி சந்திப் பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கான வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணியிலிருந்த மாணவியே மோதப்பட்டுள்ளார். மோதப்பட்ட திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை மாணவி படுகாயமடைந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தமிழீழக் காவல்துறையினர் சந்திப்பு

(அலுவலகசெய்தியாளர்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி வதிவிடப் பிரதிநிதி களுக்கும் தமிழீழ காவல்துறை முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்தில் அதன் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையில் நேற்று முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற பகல்.3.00 மணிவரை இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வன்னி வதிவிடப்பிரதிநிதி ரசல் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் புதுக்குடியிருப்பு வதிவிடப்பிரதிநிதி சேவியர் ஆகிய இருவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் கலந்து கொண்டனர்.

அதேபோல் காவல்துறை அமைப்பின் முக்கியஸ்தர்கள் பலரும் இக்கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். (சோ,கு)

## -திருமலை கட்டைபறிச்சானில்- படையினரால் எழிலன் இரு மணிநேரம் தடுத்துவைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் மூதூர் கிழக்கு கட்டைபறிச்சான் இராணுவ முகாம் பிரதேசத்தில் இருந்து தொடர்ந்து பயணம் செய்ய முடியாது சுமார் இரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந் தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8.15 மணியளவில் இடம் பெற்றது அவர் பயணம் செய்த வாகனத்தில் எட்டுப்பேர் இருந்தமையே தமது தடுத்துவைப்புக்குக் காரணம் என இராணுவத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது. மேலும் அரசியல் நடவடிக்கைகளுக்காக செல்லும் அரசியல் பொறுப்பாளர் விடுதலைப்புலிளுடனேயே (12ஆம் பக்கம் பார்க்க)

# மதுபோதையில் அதி வேகமாக வாகனமோட்டிய சாரதியின் மீதுகாவல் துறையினர் சட்ட நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

மது போதையில் அதிவேகமாக வாகனத்தை ஓட்டியவர் மீது தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்து பிரிவினர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம்பகல் வேளையில் ஏ-9 பிரதான வீதியில் வாகனம் ஒன்று தடுமாறிச் செல்வதை அவதானித்த காவல்துறையினர் வாகனத்தை பின் தொடர்ந்து சென்ற வேளை வாகனம் அதிவேகமாக செல்வதையும் கருத்தில் எடுத்து உடனடியாக வாகனத்தினை இடைநிறுத்தி விசாரணை மேற்கொண்ட போது வாகன சாரதி மது போதையில்வாகனத்தை செலுத்தியதைக் கண்டு பிடித்து உடனடியாக சாரதி மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் பிரதான வீதியில் இரவு வேளைகளில் வெளிச்சம் இன்றி வரும் வாகனங்கள் மீதும் சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாகவீதிப் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதனை கருத்தில் எடுத்து அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் இந்த ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப செயற்பட்டு விபத்துக்களில் இருந்து விடுபட ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ காவல்துறையினர் வேண்டியுள்ளனர். (சோ.கு)

- வட்டக்கச்சிப் பகுதியில் -

## நியாப் திட்டத்தின் கீழ் இரு வீதிகள் புனரமைப்பு

(வட்டக்கச்சி)

நியாப் திட்டத்தின்கீழ் வட்டக்கச்சிப் பகுதியில் இரு வீதிகள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

நாவலர் வீதியில் இருந்து பத்து வீட்டுத்திட்ட சந்தி வரையான 3கிலோமீற்றர் நீளமான வீதியும், கட்சன் வீதி அழகரத்தினம் வீதியிலிருந்து சிவிக் சென்ரர் பொருண்மியம் வரையான 2.5 கிலோமீற்றர் வீதியுமே நேற்று முன்தினம் தொடக்கம் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

இப்புனரமைப்பு வேலைகள் குறிப்பிட்ட நாட்களில் நிறைவு பெறும் என்றும் தொடர்ந்து பத்து வீட்டுத் திட்டத்தில் இருந்து சத்தார் பாலம் வரையான வீதி புனரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (12)

-புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில்-

## ஒடுங்கிய பாலங்களினால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பரந்தன் சாலையில் உள்ள கைவேலிப் பகுதியில் சில பாலங்கள் மிகவும் ஒடுங்கியிருப்பதனால் அப் பகுதியில் வீதி விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் பெரும் அவலங்களை பாதசாரிகளும், வாகன உரிமையாளர்களும் எதிர்நோக்கி வருகின்றனர். தொடர்புடைய அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து அந்தப் பகுதியில் அமைந்துள்ள பாலங்களை அகட்டுவதன் மூலமே அப்பகுதியில் ஏற்பட்டு வரும் வீதி விபத்துக்களைத் தவிர்க்க முடியுமென மக்கள் எதிர்நோக்குகின்றனர். (08)

## மாங்குளம் பிரதேச தே.எ.பே ஒன்று கூடல்

மாங்குளம் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து தேசிய எழுச்சிப் பேரவைக்குமான ஒன்று கூடல் நேற்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

இந் நிகழ்வு மாங்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் கருத்துரையினை மாங்குளம் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் அணி அழகன் நிகழ்த்தினார்.

சிறப்புரையினை முல்லை மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் நிகழ்த்தினார்.இந் நிகழ்வில் மாங்குளம் பிரதேசத்திற்குட்பட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களும் கிராமப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். (08)

## அக்கராயன் பிரதேசத்தில் ஊரக தே.எ. பேரவைகள் அமைப்பு

அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரால் தொடர்ச்சியாக ஊரக தேசிய எழுச்சிப் பேரவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் அக்கராயன் 8 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் தேசிய எழுச்சி பேரவைகளிற்கான தெரிவுகள் நடைபெற்றன.

இதன்போது கல்விக் குழுவிற்கு திருமதி க.சண்முகவல்லியும், சுயதொழில் குழுவிற்கு ச.ஈஸ்வரனும், சுகாதாரக் குழுவிற்கு க.சுகந்தினியும்- விளையாட்டுக் குழுவிற்கு தே.நிக்சனும் செயலாளர்களாக நியமிக்கப்பட்டதுடன், அக்கராயன் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளராக வே.சின்னப்பனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனோடு இணைந்த செயற்பாடாக சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு ஒன்று அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு இதன் தலைவராக சு.விஜயராஜா நியமிக்கப்பட்டார்.

அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்று வரும் இவ்வாறான குழுக்கள் அமைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று தெரிய வருகின்றது. (15)

- யாழ். மாவட்டத்தில் -

## நலன்புரி நிலையங்களில் சமாசப்பணிமனை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாச யாழ். மாவட்ட பணிமனைத் திறப்பு விழா நாளை நடைபெறவுள்ளது. தாயகநேரப்படி நாளை பகல் 10.00 மணிக்கு காங்கேசன்துறை வீதி சுன்னாகத்தில் மேற்படி பணிமனை திறந்து வைக்கப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## கணித, விஞ்ஞான வினாடி வினா போட்டி முடிவுகள் வெளியாகின

29.07.2004 அன்று முல்லை வலய மட்டத்தில் இடம்பெற்ற கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன் அடிப்படையில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர்களின்விபரங்கள் பின்வருமாறு.

தரம்.06 ஆ.நிறோஜன் மு.கோப்பாய் விக்னேஸ்வரா வித்தியாலயம். தரம்.07 செல்வன் ஆ.நிதர்சன் மு. சிறிசுப்பிரமணிய வித்தியாலயம், தரம்.08 செல்வன் வி.கஜிதரன் கலைமகள் வித்தியாலயம் முள்ளியவளை, தரம்09 செல்வன் வி.அச்சுதன் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், தரம்.10 செல்வி சி.தட்சாயினி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், தரம்11 செல்வன் சி.பிரசாந் வித்தியானந்தாக் கல்லூரி முள்ளியவளை. (08)

## திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் 'கட்ராக்' சத்திர சிகிச்சைக்கு பதிவு செய்க

வெளிநாட்டிலிருந்து வருகை தரும் கண்சத்திர சிகிச்சை நிபுணர் அவர்களால் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் வைத்திய சாலையில் இலவச "கட்ராக்" சத்திர சிகிச்சை நடாத்தப்படவுள்ளது. இதற்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு கீழ்க்குறிப்பிடப்படும் நாட்களில் நடைபெறும். இச் சிகிச்சை தேவைப்படுவோர் மேற்படி நாட்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தியாகதீபம் தீலிபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

நாளை திங்கள் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை -ஆழியவளை (ந.ப.12.00-3.00)

10.08.2004 செவ்வாய் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை -புளியங்குளம்,நயினாமடு

12.08.2004 வியாழன் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை -கற்சிலைமடு

13.08.2004 வெள்ளி தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை -அளம்பில்

14.08.2004 சனி தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை -மாங்குளம்

15.08.2004 ஞாயிறு தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை-ஐயன்குளம்

17.08.2004 சொவ்வாய் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை -பூநகரி

### உடற்றிறன் செயற்பாட்டு நிகழ்வு

மணியன்குளம் ஐயனார் முன்பள்ளி உடற் றிறன் செயற்பாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன முன்பள்ளி மேற்பார்வையாளர் தி.சாந்தினி தலைமையில் நடைபெற்றது. (15)

### அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்ட நியாப்-11- அறிமுகவிழா நாளை நடைபெறவுள்ளது.

நாளைகாலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் மேற்படி விழா இடம் பெறவுள்ளதென கிளி.மாவட்ட நியாப்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ,கு)

## கால்வாய் நோய்க்கு எதிராக தடுப்பூசி ஏற்றுதல் தீவிரம்

முல்லை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கால்வாய் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விசுவமடுப் பிரதேசத்தில் மாணிக்க புரம் கிராமத்தில் 133 மாடுகளுக்கும் இளங்கோபுரம் கிராமத்தில் 107 மாடுகளுக்கும், வள்ளுவர்புரம் கிராமத்தில் 60 மாடுகளுக்கும், கடந்த 03ஆம் திகதி தடுப்பூசி ஏற்றப்பட்டன அத்துடன் நேற்றுமுன்தினம் உடையார்கட்டு வடக்கு சுதந்திரபுரம் கிராமத்திலும், நேற்று உடையார் கட்டு தெற்கு குரவயில் கிராத்திலும் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மன்னாரில் இருவர் காயம்

(கொழும்பு)

துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி இரண்டு பேர் காயமடைந்த சம்பவம் மன்னார் பேசாலையில் இடம்பெற்றுள்ளது.

தோட்டக்காவலாளிகளான இவ்விருவரும் இனந்தெரியாதோரால் சுடப்பட்டு படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அயல் வீட்டுக்காரர் ஒருவருடன் இவர்கள் வாக்கு வாதப்பட்டிருந்ததாகவும் அந்த விவகாரத்தின் பேரிலேயே இத்துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டிருக்கலாம் என்றும் மன்னார்ப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.


## திலீபன் மருத்துவ சேவையினரால் 530 பேருக்கு விசேட சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் ஒழுங்கு படுத்தலில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த வைத்திய கலாநிதி முத்துவேல் தலைமையிலான வைத்தியக்குழுவினரால் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் 06ஆம்திகதி வரை அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்திலும், அதனை அண்டியுள்ள குமுழமுனைக் கிராமத்திலும் மருத்துவ சேவை வழங்கப்பட்டது. இதில் 530இற்கும் மேற்பட்டோருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது.

## மயானப்பகுதியிலுள்ள பற்றைக்காட்டினால் சிரமம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஆனந்தநகர் கிராமத்தில் அமைந்துள்ள மயானப்பகுதி பற்றைகள் வளர்ந்து காடாக உள்ளமையின் காரணமாக இறுதி ஊர்வலங்களின் பொழுது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.



இதன்காரணமாக இறந்தவர்களின் உடல்களை மயானத்தினுள் எடுத்துச் செல்லும் பொழுது முள்ளுப்பற்றைகளின் கீறல்களுக்கு ஆளாகவேண்டிய நிலையிலேயே சடலங்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தங்கள் ஆதங்கத்தினை தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆனந்தநகர் பொது மயானத்தில் உள்ள பற்றைக்காடுகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மயானவளாகத்தினை துப்புரவு செய்விக்க முன்வரவேண்டுமென சகல பகுதி மக்களும் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ,கு)


உடனடி வேலை வாய்ப்பு

இதோ! கவலையே வேண்டாம்.

டோகா கட்டார்

- 30 நாட்களுக்குள் பயணம்
- தொழில் – மேசன்
- சம்பளம் –20,000 ரூபாவுக்கு மேல்
- வேலை நேரம் – 08 மணித்தியாலம்
- மேலதிக நேரக் கொடுப்பனவு உண்டு.(over time)

பயணச் செலவில் அரைவாசி தொகைக்கு கடன் வசதி செய்து தரப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு- A.A. மைக்கல் தொலைபேசி-0777.279813

(சி.9960)

# தீவிரவாதிகள் மீதான அமெ.படைகளின் தாக்குதலுக்கு
# ஈராக் துணைச் சனாதிபதி இப்ராகிம் அல்சகாரி கண்டனம்

(பாக்தாத்)

**ஈராக்கில் நஜாப் நகரில் கடந்த இரண்டு நாட்களாக தீவிர வாதிகள் மீது அமெரிக்கப் படையினர் நடத்திவரும் தாக்குதல்களுக்கு ஈராக்கின் துணைச் சனாதிபதி இப்ராகிம் அல்சகாரி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஈராக் குடிமக்களைக் கொல்வது ஈராக்கைப் புனர்நிர்மாணம் செய்வதாக ஆகாது என்று அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதியான ஷியா சமயத் துறவி தலைமையிலான 300 பேரைக் கொன்றுவிட்டதாக அமெரிக்கா கூறிக்கொள்வதற்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆனால் ஷியா சமயத்துறவிப் படையில் 36பேர் மட்டுமே இறந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நஜாப் புனித நகரில் இவ்வாறு நடக்கும் படுகொலையில் எந்த விதமான நியாயமும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் உள்ள புனித நகரமான நஜாப்பில் தீவிரவாத முகாம்கள் மீது அமெரிக்க இராணுவம் ஹெலிகொப்டர் மற்றும் விமானம் மூலம் குண்டு வீச்சு நடத்தியது. இதில் 300இற்கும் மேற்பட்ட தீவிர வாதிகள் இறந்ததாக அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் கேரிபேட்சன் நிருபர்களிடம் தெரிவித்தார். அமெரிக்க இராணுவத் தரப்பில் 3பேர் இறந்ததாகவும், 2 பேர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார். கொல்லப்பட்ட தீவிர வாதிகளில் பலர் வெளிநாடுகளைச் சேந்தவர்கள் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

ஈராக்கில் மேலும் சில இடங்களில் நடந்த தாக்குதலில் 12 தீவிர வாதிகள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட தீவிரவாதிகள் அனைவரும் "ஷியா" முஸ்லிம்களின் ஆதரவாளர்கள் என்றும் தொடர்ந்து தீவிர வாதிகளை வேட்டையாடும் பணி தொடரும் என்றும் அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

## அல்ஜசீரா அலுவலகத்தை மூடுமாறு உத்தரவு

(பாக்தாத்)

ஈராக்கின் சத்தாரில் தலைமை அலுவலகத்தைக்கொண்டுள்ள அல்ஜசீரா செய்மதித் தொலைக்காட்சி அலுவலகத்தின் பாக்தாத் கிளையை ஒருமாத காலத்திற்கு மூடுமாறு ஈராக்கின் இடைக்கால அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.



அமெரிக்கக் குடியரசுக் கட்சி சனாதிபதி வேட்பாளர் ஜோன் கெரி கன்சா நகரில் ஒரு ஒன்று கூடலின் பின் தனது ஆதரவாளர்களை வாழ்த்துகின்றார்.

# கராச்சியில் கார்க்குண்டு வெடிப்பு இருவர் பலி; இருவர் காயம்

## -அல்ஹைதா மீது குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் நேற்றுக்காலை தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் இரண்டுபேர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். இந்த வெடிகுண்டு சம்பவத்திற்கு அல்-ஹைதா தீவிரவாதிகளுடன் தொடர்புடைய தீவிரவாதிகளே காரணம் என்று பாகிஸ்தான் பொலிசார் குற்றம் சாட்டியுள்ளனர். துறைமுக நகரான கராச்சியில் வாடகைக் கார் நிலையத்திற்கு அருகே நேற்றுக்காலை 6.30மணியளவில் இந்த கார் வெடிகுண்டு ஒன்று பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியுள்ளது. இதன்போது காருக்கு அருகே நின்றுகொண்டிருந்த இரண்டுபேர் பரிதாபமாக உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

பின்னர் பொலிசார் நடத்திய சோதனையில் சுமார் மூன்றுகிலோ எடையுள்ள வெடிகுண்டை தீவிரவாதிகள் காரில் வைத்து வெடிக்கச் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

# பாக். மீது பொருளாதாரத் தடைக்கு வகை செய்யும் சட்ட மூலம் அமெ. பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

பாகிஸ்தான் மீது, மீண்டும் பொருளாதாரத் தடை கொண்டு வர வகை செய்யும் சட்டம் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான், அணு ஆயுத ரகசியங்களை சில நாடுகளுக்கு விற்றதைத் தொடர்ந்து அந்த நாடு அணு ஆயுதப்பரவலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. குடியரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாம் லான்டோஸ் ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து இருக்கிறார். அணு ஆயுத கள்ளச் சந்தை ஒழிப்புச் சட்டம் என்ற பெயரிலான இந்தச் சட்டம் அணு ஆயுத பரவல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அந்நிய நாடுகள் மீது தடை விதிக்க வகை செய்கிறது.

குறிப்பாக பாகிஸ்தானை குறி வைத்து கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டம், அமெரிக்க உதவியில், 75 சதவீதத்துக்கு மேல் வழங்கப்படக்கூடாது என்று கூறுகிறது. இதில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமானால் 2 உறுதிமொழிகளை சனாதிபதி அளிக்க வேண்டும். அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு நாட்டுக்கும் பாகிஸ்தான் உதவி செய்ய வில்லை என்பது ஒன்று அடுத்தது அணு ஆயுத தொழில் நுட்பத்தை கள்ளச் சந்தையில் விற்றது தொடர்பாக கிடைத்த அனைத்துத் தகவல்களையும் அமெரிக்காவுடன் பாகிஸ்தான் பகிர்ந்து கொள்வது 2ஆவது உறுதி மொழி ஆகும். இந்த 2 உறுதிமொழிகளை பாராளுமன்றக குழுவுக்கு அளித்த பிறகே தடையில் இருந்த விலக்கு அளிக்கப் படும்.

இவ்வாறு அந்தச் சட்டத்தில் கூறப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் பாகிஸ்தான் மீது மீண்டும் பொருளாதாரத் தடை கொண்டு வரப்படும்.

### தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு

ஈராக்கிய தீவிரவாதிகளுக்கு 30 நாட்களுக்கு மட்டும் பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக ஈராக்கின் இடைக்கால அரசின் பிரதமர் இயத் அலாவி நேற்று அறிவித்துள்ளார். சிறிய குற்றங்களைச் செய்த தீவிரவாதிகளுக்கே இப்பொது மன்னிப்பு வழங்கப்படுவதாகவும் பாரிய குற்றச் செயல்களைச் செய்தவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்றும் இயத் அலாவி மேலும் தெரிவித்துள்ளா.

# பிஜி துணைச் சனாதிபதிக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை

அவுஸ்திரேலியா அருகே உள்ள பிஜித்தீவு துணை சனாதிபதியாக இருக்கும் ஜொபேசெனி லோலிக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்திய வம்சாவழியான மகேந்திர சவுத்ரி பிரதமராக இருந்த போது, அவரது ஆட்சியை கவிழ்ப்பதற்கு நடந்த புரட்சிக்கு உதவியதற்காக அவருக்கு இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது.

அவருடன் துணை சபாநாயகர் ரகுய்ட்டா வகாலாலபுரே உள்ளிட்ட 4 பேருக்கும் ஒன்று முதல் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. இந்த புரட்சிக்குத் தலைமை நடத்திய ஜார்ஜ் ஸ்பைட்டுக்கு ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.



தெற்குக் கராச்சியில் கார்க்குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தின் தோற்றம். இக்குண்டு வெடிப்பின் போது இருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

# இராணுவம்-தீவிரவாதிகள் மோதல் ஜம்மு காஷ்மீரில் எட்டுப் பேர் பலி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் இரண்டு இராணுவத்தினரும் மூன்று தீவிரவாதிகளும் உட்பட எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு கூறியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு நடந்துள்ளது. ஸ்ரீநகரிலிருந்து சுமார் 40 கிலோமீற்றர் தூரத்தில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த மோதலில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். என்று இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளது.

இதேவேளை தீவிரவாதிகளின் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 2 பேர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவத்தரப்புக் கூறியுள்ளது.

இதேபோல் பூஞ் மாவட்டத்தில் தீவிரவாதிகள் தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தெற்கு காஷ்மீரில் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் விபரம் தெரியவரவில்லை.

# டில்லி,மும்பை,சென்னை விமான நிலையங்களின் பாதுகாப்பை இந்திய அரசாங்கம் அதிகரித்தது

## –இந்திய உளவுத்துறையின் எச்சரிக்கையை அடுத்து நடவடிக்கை

(சென்னை)

சுதந்திர தின நிகழ்வில் விமான நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் மீது தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக சென்னை விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

சுதந்திர தின நிகழ்வின்போது நாட்டின் அமைதியைக் குலைக்கக் கூடிய நோக்கில் டில்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களிலும், நகரின் முக்கிய விமான நிலையங்களிலும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் குண்டு வெடிப்பு உள்ளிட்ட தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதை உளவுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இதனால் தீவிரவாதிகளால் தாக்கப்படும் அபாயம் உள்ள இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சென்னை விமான நிலையத்தில் மத்திய பாதுகாப்புப் படையினர் உள்ளனர். இவர்களுடன் தமிழகப் பொலிசாரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விமான நிலையத்திற்கு வருமம் அனைவரும் தீவிர பரிசோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். தீவிரவாதிகளின் மிரட்டலையடுத்து விமான நிலையத்தினுள் பார்வையாளர்கள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. விமான நிலைய வளாகமும் பாதுகாப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திர தினம் எதிர் வரும் 15 ஆம் திகதி கொண்டாடப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சியாச்சின் மலைப்பகுதியில் படைகளைக் குறைக்க இந்தியா-பாகிஸ்தான்குழுவினர் முடிவு

(புதுடில்லி)

இந்திய பாகிஸ்தான் வெளியுறவு மட்ட இரண்டு நாள் பேச்சு வார்த்தை நேற்று முடிவடைந்துள்ளது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் இருநாட்டு பாதுகாப்புச் செயலளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இரண்டு நாள் பேச்சுக்களின் முடிவில் இரு நாடுகளும் கூட்டாக அறிக்கையும் வெளியிட்டிருக்கின்றன. இந்த பேச்சுவார்த்தைகளின் முடிவில் சியாச்சின் மலைப் பகுதியில் இரு நாடுகளும் தமது படைகளை குறைப்பது என்று இணக்கம் தெரிவித்துள்ளன.

அத்துடன் கடந்த டிசம்பர் மாதத துடன் முடிவடைந்த இரு நாட்டுப் போர் நிறுத்தமும் நீடிக்கப்பட்டுள்ளது. இந்தியக் குழுவிற்கு பாதுகாப்புச் செயலர் அஜய் விக்கிரம் சிங் தலைமை ஏற்றிருக்கின்றார். பாகிஸ்தான் குழுவிற்கு பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் ஹமிக் நவாஸ் பஸ்வான் தலைமையேற்றுள்ளார்.நேற்று முன்தினம் ஆரம்பமான பேச்சுக்கள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன.


# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆதரவில் நலன்பேணல் பயிற்சிநெறி

**சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு,மல்லாவி பிரதேசங்களிலுள்ள வணிக நிறுவனங்கள், பல்பொருள் வாணிபங்கள், உணவுச்சாலைகள், மரக்கறிவிற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், அரிசிஆலைகள், சந்தைகள் போன்றவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கான நலன் பேணல் பயிற்சி நெறிகள் கடந்த மாதத்தில் நடாத்தப்பட்டுள்ளது.**

இப்பயிற்சி நெறி நிலையங்களில் தனிநபர் சுகாதாரம், சுற்றாடல் சுகாதாரம் பேணுதல் தொடர்பாகவும், முதலுதவி தொடர்பாகவும், சுகாதாரக் கல்வி தொடர்பாகவும், சுகாதாரக் கட்டமைப்புக்களும் அவற்றுடன் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாகவும், தொற்று நோய்கள், நுளம்பினால் பரவும் நோய்கள் தொடர்பாகவும் சுகாதார திணைக்கள பிரதிநிதிகள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர், மனிதவள மேம்பாட்டுப் பகுதியினரும் விரிவுரைகளை வழங்கியதோடு செய்முறைகளும் செய்து காட்டப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் 150 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பங்குபற்றினார்கள். இப்பயிற்சி நெறிகளை தொடர்ச்சியாக நாடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பயிற்சியில் பங்குபற்றுபவர்களுக்கான தேர்வுகள் நடாத்துவதற்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் திட்டமிடப்பட்டுள்ளது.



கிளி/ கல்மடு நகர் அ.த.க பாடசாலையில் கிராமிய அபிவிருத்தி வங்கியில் "தளிர் சேமிப்புக் கணக்கில்" அதிகூடிய வைப்பினைச் செய்த மாணவர்களுக்கு கிராமிய அபிவிருத்தி வங்கியினரால் பரிசில்கள் வழங்கப் பெற்றது. கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் மாணவியொருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதனை படத்தில் காணலாம். (சோ,கு)

## 2ஆம் தவணை விடுமுறைக்கு பாடசாலைகள் மூடப்பட்டன

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெற்ற பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல அரசாங்கப் பாடசாலைகளும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நேற்று முன்தினத்துடன் மூடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறு மூடப்பட்ட பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளன.

உயர்தரப் பரீட்சை நடைபெற்ற அரச பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 20ஆம் திகதி முதல் மூடப்படவுள்ளன. மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 30ஆம் திகதி திறக்கப்படவுள்ளன.

இதேவேளை சகல அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மூடப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### சிரமதானம்

(முள்ளியவளை)

கேப்பாப்புலவு சூரிபுரவீதி அப்பகுதி மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மேற்படி சிரமதானப்பணி அப்பகுதி ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர், அப்பகுதி வலய அரசியல் துறைப்பொறுப்பாளர்களின் ஒழுங்கு படுத்தலில் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் வரை வீதியின் இரு மருங்கும் பற்றைகள் வெட்டி அகற்றப்பட்டது, (ஆ)

## வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களில் ஒரு பகுதியினருக்கு பொருட்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களில் ஒரு பகுதியினருக்கு நேற்று முன்தினம் உலர் உணவற்ற பொருட்கள் பாஜ் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டது.

கிளி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து 175 குடும்பங்களுக்கு தலா 6,300 ரூபா பெறுமதியான உலர்உணவற்ற பொருட்கள் பாஜ் நிறுவனத்தினரால் வழங்கப் பெற்றது.



முன்னைய பட்டியல்களில் புதுக்குடியிருப்பு, விவேகானந்தநகர், உதய நகரைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மேற்படி பொருட்கள் வழங்கப் பெற்றுள்ளதுடன், யு.என்.எச்.சி. ஆர் நிதியுதவியுடன் பாஜ் நிறுவனம் மேற்படி செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

### 4 மாதங்களின் பின் கொடுப்பனவு வந்தது

கடந்த ஏப்பிரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற சிறிலங்கா பாராளுமன்ற பொதுத் தேர்தல் கடமையிலீடுபட்ட கரைதுறைப் பற்று பிரதேசசபை சுகாதார தொண்டர்களுக்கான தேர்தல் கடமைக் கொடுப்பனவு நான்கு மாதங்களின் பின் கடந்த வாரம் காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. (ஆ)

## உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர் புறக்கணிப்பிற்கு எதிராகப் போராட்டம்

(திருகோணமலை)

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் முதலாம் கட்டத் தெரிவின் போது உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா (HNDA) கற்கை நெறியை கருத்திற்கொள்ளாது நிராகரித்ததை ஆட்சேபித்து, திருகோணமலை உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அடையாள பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். நூற்றுக் கணக்கான மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் திருகோணமலை உயர் தொழில் நுட்ப நிறுவன வளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்திகரமான பதில் தங்கள் கோரிக்கைக்குக் கிடைக்காத பட்சத்தில் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக திருகோணமலை உயர்தொழில் நுட்பமாணவர்கள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நிதி அமைச்சே! எங்கள் கனவுகளுக்கு கல்லறை கட்டாதே " "எமது நிர்க்கதி நிலைக்குப் பதில் சொல்" சுற்றறிக்கை என்பது வெறும் கண்துடைப்பா? என்று சுலோக அட்டைகளை மாணவர்கள் தாங்கிய வண்ணம் காணப்பட்டனர். பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரினால் 30.10.1990 இல் வெளியிடப்பட்ட 46/90 இலக்க சுற்றறிக்கையின்படி உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறி, ஆட்சேர்ப்பின்போது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற வர்த்தக இளமாணிப்பட்டத்துக்குச் சமானமாகக் கருத்திற்கொள்ளப்படும் என்று வெளிப்படுத்துகின்றது. இத்தீர்மானம் இது வரையில் எவ்வித மாற்றத்துக்கும் உள்ளாகவில்லை என்று உயர்தொழில் நுட்ப மாணவர்கள் தங்களின் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். (25)

## முருங்கன் வைத்தியசாலையில் இன்று விசேட வைத்திய சேவை

(மன்னார்)

மன்னார் வாழ்வோதயத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்,காது, தொண்டை மற்றும் பொதுவான நோய்களுக்கான வைத்திய பரிசோதனை இன்று காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை முருங்கன் மாவட்ட வைத்தியசாலையில் இடம் பெறும்.

இந்த வைத்திய பரிசோதனைக்கு கொழும்பு பிரபல வைத்திய நிலையமான அப்பலோவில் இருந்து வைத்திய நிபுணர்கள் வருகை தரவுள்ளார்கள். எனவே நோயாளர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து செயற்படுமாறு மன்னார் வாழ்வோதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.[illegible]சுராஜா அவர்கள் தெரிவித்துள்ளார். (மி)

## ஐ.ஓ.எம். அலுவலகம் மன்னாரில் திறந்து வைப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு அவசிய உதவிகள் வழங்கும் ஐ.ஓ.எம் நிறுவனம் தனது அலுவலகத்தினைக் கடந்த 3ஆம் திகதி மன்னார் பள்ளிமுனை வீதியில் திறந்து வைத்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் வதிவிடப் பிரதி நிதி இதனைத் திறந்து வைத்தார். இந் நிகழ்விற்கு மன்னார் மாவட்ட இணைப்பாளர் தலைமை வகித்தார். இதில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் உதவி அரசாங்க அதிபர் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (மி)

## முல்லை மின் வழங்கல் நேரம் இரு மணித்தியாலங்கள் அதிகரிப்பு

முல்லைத்தீவில் கரை துறைப் பற்று பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த 11 மணி மின் வழங்கல் சேவை 13 மணித்தியாலங்களாக கடந்த வியாழக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய நேர ஒழுங்கு அதி காலை 5.00 மணி தொடக்கம் காலை 6.00 மணிவரையும் பின்னர் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. இரவு நேரம் வழமை போல. மாலை 6 மணி தொடக்கம் 10 மணிவரை வழங்கப்படும் எனவும் கரைதுறைப் பற்று பிரதேச சபைச்செயலாளர். இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். இது பரீட்சார்த்த மின்வழங்கல் சேவையெனவும் மக்கள் கொடுப்பனவுகளை ஒழுங்காக வழங்குமிடத்து இது நீடிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (20)

### வீதி ஒழுங்கு நடவடிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ காவல்துறையினர் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கின்ற நேரங்களிலும், முடிவடைகின்ற நேரங்களிலும், பாடசாலைகளின் முன்பாகவும் சந்திகளிலும் பொது இடங்களின் முன்பாகவும் வீதிக் கடமையில் ஈடுபட்டுள்ளதால் மேற்படி வீதிகளில் விபத்துக்கள் தடுக்கப்பட்டு வருவதுடன் மாணவர்கள் விபத்து அச்சமின்றி பாடசாலைகளுக்குச் சென்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது.(ஆ)

## -கிளி. திருநெறிக்கழகத்தின்- சைவநெறிப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவருக்கு இன்று பரிசளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக்கழகத்தினால் ஆறாம் தர மாணவர்களுக்கு நடாத்தப்பெற்ற இடைக்கால சைவ நெறிப்போட்டிப் பரீட்சை 2004 சிறப்புப் புள்ளி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம், பரிசு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மற்றும் கழக அறநெறி வகுப்பில் அரசினால் நடாத்தப்பெற்ற பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளது. இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் திருநெறிக்கழக தலைவர் வே. மகாலிங்கம் (தமிழ் ஐயா) வேண்டியுள்ளார். (சோ,கு)

## துணுக்காய் பிரதேசத்தில் வீதிகள் புனரமைப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீட்டில் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் ரூபா ஒதுக்கீட்டில் சட்டம்பியார் குளம் ஒரு கிலோமீற்றர் தூரம் கொண்டவீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீதிக்கான கிரவல் மண் பறிக்கப்பட்டு, நீரோடிகள், மதகுகள் என்பன அமைத்து வருகின்றனர். இது போன்று மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் தென்னியங்குளம் வீதியும், அம்மன் குளவீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று துணுக்காய் பிரதேச சபையின் தொழில்நுட்ப அதிகாரி ச.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

# அமெரிக்காவினதும், இந்தியாவினதும் சமாதானத்திற்கான பங்களிப்பு?

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமெரிக்காவினதும், இந்தியாவினதும் நிலைப்பாடு என்ன? இவ்விரு நாடுகளும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண விரும்புகின்றனவா? அவ்வாறானால் அவற்றின் நடவடிக்கைகள் இவற்றிற்குப் பொருத்தப்பாடானவையாக உள்ளனவா? இவை இன்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள முக்கிய கேள்விகளாகும்.

அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக்காண விரும்புவதாகவே கூறிக்கொள்கின்றன. அத்தோடு, நோர்வேயின் சமரச முயற்சிகளைத் தாம் வரவேற்பதாகவும், அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் உறுதி கூறுகின்றன.

இந்தியாவின் புதிய அரசாங்கம் அண்மையில் இனப்பிரச்சினை தொடர்பாக தனது அபிப்பிரயாங்களை வெளியிட்டுள்ளது. புதுடில்லியில் தம்மைச் சந்தித்த சிறிலங்காப் பிரதமரிடம், இந்தியாவின் நிதியமைச்சர் ப. சிதம்பரம் "இப்பிரச்சினைத் தீர்விற்கு மீண்டும் இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இந்திய அரசின் நிலைப்பாடாகும்" எனத் தெரிவித்திருந்தார்.


இதேவேளை, "இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா பங்களிப்புச் செய்ய வேண்டுமெனப் பரவலாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்துள்ள போதிலும், இதற்கு இந்தியா இணக்கம் தெரிவிக்கவில்லை. அத்தோடு, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை நாடு கடத்தக் கோரும் கோரிக்கையை இந்தியா ஏற்கனவே இந்தியா-சிறிலங்கா அரசிடம் விடுத்துள்ளது. ஆனால், தற்பொழுது இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருவதினால், நாடு கடத்தும் கோரிக்கைக்கு இந்தியா புதிய அழுத்தம் கொடுக்கப் போவதில்லை" என அண்மையில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கூறியிருந்தமை இந்தியா சமாதான முயற்சிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டைகளைப் போடவிரும்பவில்லை என்ற தோற்றப்பாட்டையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இதை ஒத்ததாகவே அமெரிக்காவின் நிலைப்பாடும் உள்ளது. இதனை வலியுறுத்துமாப்போன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி இராஜங்க செயலாளர் டொனால்ட் காம்ப் "இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் உடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இலங்கையில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையில் உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளை நிறுத்திக் கொள்வதற்கு வழிவகுக்கும். சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தராகச் செயற்படும் நோர்வேத் தரப்பிற்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை அளிக்கின்றது" எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக அரசியல் ரீதியில் கருத்துக்களை வெளிப்படுத்தும் இந்தியாவும், அமெரிக்காவும் மறுபுறமாகச் சிறிலங்கா அரசையும், அதன் இராணுவத்தையும் பலப்படும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஆகையினால், அமெரிக்காவினதும், இந்தியாவினதும் கூற்றுக்களுக்கும், செயல்களுக்கும் இடையில் வேறுபாடு / முரண்பாடு தெளிவாகவே வெளிப்படுவதாகவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியற்தீர்வொன்று காணப்பட வேண்டும் எனக் கூறும் அமெரிக்காவும், இந்தியாவும் சிறிலங்கா அரசு பலப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவையாகவே உள்ளன. இது குறித்து அண்மையில் கருத்து வெளியிட்டுள்ள இந்தியத் தரப்பு, சிறிலங்கா அரசு அரசியல் ஸ்திரத்தன்மை பெற வேண்டும் எனக் கூறியிருந்தது. இதேவேளை, அமெரிக்கத் தரப்போ, சிறிலங்கா இராணுவம் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டதாகவுள்ளது.

இந்த வகையில், இந்தியாவும், அமெரிக்காவும் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் பலப்படுதல் வேண்டும் என்ற ரீதியிலேயே தமது நிலைப்பாட்டைக் கொண்டவையாக உள்ளன. இதற்கு ஏற்றவகையில் அவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன எனக் கூறுவதும் தவறாகமாட்டாது.



சிறிலங்காவைப் பொறுத்து இன்று தென் ஆசியாவில் பாகிஸ்தானை அடுத்து அமெரிக்காவின் சலுகை பெற்ற நாடு எனக் கூறின் மிகையாகாது. அமெரிக்காவிடம் இருந்து குறைந்த விலையில் ஆயுதங்கள் கொள்வனவிற்கான சலுகைகளைப் பெற்றுள்ள சிறிலங்கா அரசிற்கு இராணுவத் தளபாட ரீதியிலும், படைத்துறை ஆலோசனை ரீதியிலும் அமெரிக்கா உதவிகளை வழங்கத் தொடங்கியுள்ளது.

இந்த வகையில், அண்மையில் சிறிலங்கா கடற்படைக்கென ஒரு கரையோர ரோந்துக் கப்பலை வழங்கியுள்ள அமெரிக்கா, மேலும் இராணுவ உதவிகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் நிரம்பவே உள்ளன. இதனைத் தவிர சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்புடன் அமெரிக்கா படைத் தரப்பு நேரடித் தொடர்புகளை பார்த்துக் கொள்ளும் வகையில் அவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இந்த வகையில், அமெரிக்காவின் கிழக்கு பசுபிக் பிராந்திய கடற்படைத் தலைமையகத்துடன் நெருக்கமான உறவுகளைச் சிறிலங்கா கடற்படை மற்றும் ஏனைய படைத்துறைகளும் கொண்டுள்ளன. அத்தோடு, கிழக்குப்பசுபிக் பிராந்திய கடற்படைத் தளபதியின் கண் வீச்சிற்குள் சிறிலங்காவும் உட்பட்டுள்ளது என்பதை அவரின் இலங்கை விஜயங்களும் அமைந்துள்ளன.

மேலும், கிழக்குப் பசுபிக் பிராந்தியக் கடற்படைத் தளபதி யாழ். குடாநாட்டிற்கு விஜயங்களை மேற்கொள்வதும், படை நிலைகளைப் பார்வையிடுவதும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்துவதும், சிறிலங்காவுடன் நெருக்கமான இராணுவ உறவை வளர்த்துக் கொள்ள அமெரிக்கா முற்பட்டுள்ளது என்பதற்கான சமிக்ஞைகளாகவே கொள்ளத்தக்கதாகும். அத்தோடு, தமிழ் மக்களின் பார்வையில் சிறிலங்காவின் பின்னால் தாங்கள் இருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிக்காட்ட முனைவதாகவும் உள்ளது.

இதேவேளை, இந்தியத் தரப்பும், சிறிலங்காவுடனான இராணுவ உறவை வளர்த்துக்கொள்வதில் ஆர்வம் கொண்டதாகவே தெரிகிறது. சிறிலங்கா கடற்படையுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டும் இந்தியா, அமெரிக்கா போலவே ரோந்துக் கப்பல் ஒன்றைச் சிறிலங்கா கடற்படைக்கு வழங்கத் தயாராகவுள்ளது.

அது மட்டுமல்லாது, சிறிலங்கா அரசிற்கும் - இந்தியாவிற்கும் இடையில் பாதுகாப்புத் தொடர்பான உடன்பாடு ஒன்று கைச்சாத்தாவதற்குமான முயற்சிகள் முற்றுப் பொறும் நிலையில் உள்ளது. அத்தோடு, சிறிலங்காவிற்குப் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பை வழங்குவதற்கு அதிகம் இந்தியா ஆர்வம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில், அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் இருவேறு அணுகு முறையைக் கைக்கொள்வதாகவே கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய இரட்டை அணுகுமுறைக்கான நோக்கம் என்ன? இது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளைப் பாதிக்கமாட்டாதா? என்பதே இன்று தமிழ் மக்கள் மத்தியில் எழும் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் அடிப்படையாகும்.

அமெரிக்காவைப் பொறுத்து, அதன் பூகோள ப் பாதுகாப்புத் திட்டத்தின் படியும், பாரசீக வளைகுடா எண்ணெய் வர்த்தகத்தின் பாதுகாப்புக் கருதியும் சிறிலங்காவிற்கான இராணுவ ரீதியிலான உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது சில இராணுவ ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும்.

அதாவது ஆப்கான், ஈராக் பகுதிகளில் அமெரிக்கா இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையிலும், பாரசீகவளைகுடாவிலிருந்து ஏற்றுமதியாகும் பெற்றோலியப் பொருட் களுக்கான பாதுகாப்பு என்ற ரீதியிலும் சிறி லங்காவில் உறுதியானதும், பலமானது மான அரசு இருத்தல் வேண்டும் என்பதும் அமெரிக்காவின் நிலைப்பாடாகும். ஆகையினால், சிறிலங்கா பலப்படுத்தப்படுதல் வேண்டும் என்பது அதன் அணுகுமுறையாகக் கொள்ளப்படுகின்றது.


இந்தியாவைப் பொறுத்து, அதன் பிராந்தியப் பாதுகாப்புத்திட்டம் மற்றும் தனது தேசியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் சிறிலங்கா அரசு பலப்படுத்தப்பட வேண்டும். ஸ்திரத்தன்மையுடன் இருத்தல் வேண்டும் என்பது அதன் நிலைப்பாடாகும். அத்தோடு, திருமலைத்துறைமுகப் பகுதியில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட எண்ணெய்க் குதங்களின் பாதுகாப்பு மற்றும் சிறிலங்காவில் உள்ள பெருமளவிலான முதலீடு மற்றும் பொருளாதார அனுகூலங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும், சிறிலங்காவிற்கான உதவிகளை வழங்க இந்தியா தயாராகவுள்ளது.

அதாவது, பூகோள ரீதியிலான தமது நலன்களுக்காக அமெரிக்காவும், இந்தியாவும் சிறிலங்காவிற்கு இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்கி வருவதாக அர்த்தம் கற்பிக்கப்படினும், சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் பலப்படுத்தப்படுவதானது சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாக அமையமாட்டாதா? யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறுவதாக அமையமாட்டாதா? என்பதே தற்போதுள்ள வினாவாகும்.

ஏனெனில், சிறிலங்காவில் அமைதி நிலவுவதற்கும், யுத்த நிறுத்த உடன்பாடு சிறப்பாக வழி நடத்தப்படுவதற்கும் இராணுவச் சமநிலையானது அவசியமானதாகும். அதாவது, இராணுவச் சமநிலையில் ஏற்படுத்தும் மாற்றம் யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பாதிக்கும் என்பது வெளிப்படையானது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அபிப்பிராயமும் இதுவே ஆகும்.

இந்நிலையில், சிறிலங்கா அரசை இராணுவ ரீதியில் பலப்படுத்துவதானது சமாதான முயற்சிகளுக்கு மாறானதொரு செயற்பாடாகவே இருக்கும். ஏனெனில், சிறிலங்கா இராணுவ ரீதியில் பலப்படும் பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சிறிலங்கா அரசாங்கம் முறித்துக் கொள்ளும் என எதிர்பார்க்கலாம்.

இதற்குக் கடந்த கால நிகழ்வுகளே எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்கவையாகும். அதாவது, சிறிலங்கா அரசு எப்பொழுதெல்லாம் பலவீனப்படுகின்றதோ அவ்வேளைகளில் எல்லாம் அது சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டியதுண்டு.



மாறாக, அது எப்பொழுது பலப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் அது சமாதானத்தை மறந்துவிட்டு யுத்தத்தையே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தெரிவு செய்திருந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டுதான் அமெரிக்காவினதும், இந்தியாவினதும் சிறிலங்கா அரசைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு எந்தளவிற்கு உதவுவதாக இருக்கும் என்ற கேள்வி தமிழ்மக்கள் மனங்களில் எழ வைத்துள்ளது. சில வேளைகளில் அரசாங்கம் பலப்படுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் முன்னேற்றகரமான முடிவுகளை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம் என அமெரிக்காவோ இந்தியாவோ கருதினால், அதில் ஏமாற்றமே அவர்களுக்கு மிஞ்சும். ஏனெனில், சிறிலங்கா அரசு பலப்படும் போதெல்லாம் அது தமிழ் மக்கள் மீது அடக்குமுறையைக்கட்டவிழ்த்துவிட்டமையே வரலாறாகும்.

ஆகையில், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படுவதையே அமெரிக்காவும், இந்தியாவும் விரும்புவதாகக் கூறிக் கொண்டாலும் அவர்களின் செயற்பாடுகள் சமாதானத்திற்கோ அரசியல்தீர்விற்கோ வாய்ப்பளிப்பதாக இருக்கமாட்டாது. சிறிலங்கா அரசாங்கம் பலப்படுவதன் மூலம் சமாதானத்திற்கான வாய்ப்புப் பிரகாசமாகும் என அமெரிக்காவும், இந்தியாவும் உளப்பூர்வமாகக் கருதின் அது நிச்சயம் அவர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கும். மாறாக, அமெரிக்காவும், இந்தியாவும் சிறிலங்கா ஆட்சியாளர்களைப் புரிந்து கொண்டே உதவிகளைச் செய்வதாக இருப்பின் அவை சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கும்.

□□

ஜெயராஜ்


# ஈராக் விவகாரத்தில் தடுமாறும் இந்தியா

## அ. கலைவாணி

“பாவம் ஒரு பக்கம் பழியோ வேறு பக்கம்” எனும் பழமொழிக்கு யாரை ஒப்பிடலாம் என்றால் தற்போது சட்டென்று கைநீட்டக் கூடிய நிலையில் இந்தியா தான் இருக்கின்றது.

அமெரிக்காவும் அதன் கூட்டணிப் படைகளும் ஈராக்கை துவம்சம் செய்ததன் மொத்த வடிவத்தின் பிரதிபலனும் இந்தியாவின் தலையில்தான் விடிந்துள்ளது எனலாம்.

ஏனெனில், ஈராக் தீவிரவாதிகள் இந்தியர்களின் கழுத்தில் கத்தி வைத்துத்தான், குவைத் நிறுவனத்தையும் அமெரிக்காவையும் அடிபணிய வைக்க முனைப்புக் காட்டுகின்றனர்.



ஈராக்கில் பணயக் கைதிகளாகவுள்ள மூன்று இந்தியர் உட்பட ஏழு பேர்.

குவைத் நிறுவனம் கொஞ்சம் சறுக்கினாலும் பலியாவது இந்தியர்கள்தான். அதனால் இந்தியர்களை பத்திரமாக மிகவும் கவனமாக மீட்க வேண்டிய நிலையில் இந்திய மத்தியரசு இருக்கின்றது.

ஈராக் விவகாரத்தில் இந்தியா மூக்கை நுழைத்துக் கொண்டதாகத் தகவல்கள் மூலம் தெரியவில்லை. முன்னாள் வாஜ்பாய் அரசு ஈராக்கில் இந்தியத்துருப்பினரின் பணி தொடர ஒருபோதும் அனுமதித்ததில்லை.

ஆனால், புதிதாக பதவியேற்ற மன்மோகன்சிங் அரசு கொஞ்சம் வித்தியாசப்பட்டது எனலாம். அதிலும் முக்கியமாக வெளியுற வுத்துறை அமைச்சர் நட்வர்சிங் ஈராக்கிற்கு படை அனுப்புவதில் ஆர்வம் காட்டினார்.

மறைந்த முன்னாள் சனாதிபதி ரொனால்ட் றீகனின் இறுதிச் சடங்கில் பங்கேற்க அமெரிக்க சென்ற வெளியுறவு அமைச்சர், ஈராக்கிற்கு படை அனுப்புவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அமெரிக்காவுக்கு உறுதியளித்துவிட்டுத்தான் நாடு திரும்பினார்.

இதனால்,‘நுதலும் தன் வாயால் கெடும்’ எனும் நிலைதான் அவருக்கு ஏற்பட்டது. நாடு திரும்பிய வெளியுறவு அமைச்சரை எதிர்க்கட்சிகள், ஈராக்கிற்கு படை அனுப்புவது பற்றி தனிப்பட்ட ரீதியில் உறுதியளித்துவிட்டதாக மக்களவை, மாநிலங்களவை இரண்டிலும் ஒரு பிடி பிடித்துவிட்டன. தொடர்ந்து இரு அவைகளையும் புறக்கணிப்புக்கோஷம் என்று அமளிப்படுத்தின.

இதனால், பிரதமர் மன்மோகன்சிங், இந்தியா ஒருபோதும் தனது படைகளை ஈராக்கிற்கு அனுப்புவதில்லை என்றும், வெளியுறவு . அமைச்சர் அமெரிக்காவில் தவறுதலாக வாக்களித்துவிட்டதாகவும் எதிர்க்கட்சிகளிடம் மன்னிப்புக் கோரும் நிலைக்கு உள்ளானார்.

எனவே, ஈராக்கில் இந்திய துருப்புக்களின் பங்களிப்பு இல்லாத நிலையில் இந்தியர்கள் கடத்தப்பட்டிருப்பது... ஏன்... எனும் வினாவை தோற்றுவிக்கத்தான் செய்கின்றது.

அதேவேளை, இந்தியர்களைக் கடத்திச் சென்றுள்ள தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எவ்வித நிபந்தனைகளையோ அச்சுறுத்தலையோ விதித்தாகத் தெரியவில்லை. மாறாக வேறு நாடுகளுக்குத்தான் நிபந்தனைகளை விதித்திருக்கின்றனர்.

எனவே, இந்திய துரும்பு சீட்டால், ஏனைய நாடுகளை அடிபணிய வைக்கும் தீவிரவாதிகளின் போக்கு நிச்சயம் அவர்களுக்கு வெற்றியளிக்கின்றதோ இல்லையோ... இந்தியாவுக்குத் தான் சிக்கல்களைத் தோற்றுவிக்க வாய்ப்பளிக்கின்றது.

ஏனெனில், தீவிரவாதிகளின் நிபந்தனைகள் அதனைத்தான் பறை சாற்றுகின்றன. இந்தியர்கள் மூவரையும் விடுதலை செய்வதற்கு தீவிரவாதிகள் விதித்துள்ள நிபந்தனைகள்.

☐ குவைத், அமெரிக்க சிறைகளில் அடைக்கப்பட்ட ஈராக்கியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். (முன்பு கூறியது)

☐ தற்போது ஈராக்கிலுள்ள குவைத் நிறுவனம் ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டும்.

☐ பலூஜாவில் அமெரிக்கக் கூட்டணிப் படை நடத்திய தாக்குதலில் இறந்தவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

எனவே,. குவைத் நிறுவனத்தின் கைகளில்தான் இந்திய பிணைக் கைதிகளின் உயிர் இருக்கின்றது.

அதனால், குவைத் நிறுவனத்திடம் இந்தியா கேட்டுக் கொண்டமைக்காக மனிதாபிமான அடிப்படையில் உதவும் நோக்கில் ஈராக்கைவிட்டு வெளியேறச் சம்மதம் தெரிவித்து வெளியேறி இருக்க முடியும்.

ஆனால், இந்தியர்களை விடுவிப்பதற்காக பலூஜா மக்களுக்கு நஷ்டஈடு அளிக்க முன்வருமா... என்பது மிகப் பெரிய சந்தேகத்திற்குரிய வினா.

இதேவேளை, ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதலால் நாளுக்குநாள் ஈராக் அதிர்கின்றது. உயிர்கள் பலி கொள்ளப்படுகின்றன. இதனால், ஏற்கனவே அமெரிக்காவுடன் கூட்டணி வகித்த நாடுகள் ஈராக்கைவிட்டு வெளியேறியும் உள்ளன.

இந்நிலையில், குவைத் நிறுவனமும் ஈராக்கைவிட்டு எப்போது ஓட்டம் காட்டலாம் எனும் எதிர்ப்பார்ப்பிற்கு இந்தியர்கள் கடத்தப்பட்டதும், இந்தியாவின் வேண்டுகோளும் கைகொடுத்து உதவியுள்ளது.

ஆனால், ஒரு விடயம் மட்டும் குவைத் நிறுவனத்திற்கு உதைக்காமல் இல்லை. அது அமெரிக்காவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பலூஜா மக்களுக்கு நஷ்டஈடு 'குவைத் நிறுவனமே வழங்க வேண்டும் எனும் தீவிரவாதிகளின் மிரட்டல்.


இந்த நிபந்தனையை குவைத் நிறுவனம் ஏற்றுக் கொள்வது சந்தேகமே. அதனால்தான் தீவிரவாதிகளுடனான பேச்சு வார்த்தைகள் நீள்கின்றன. தீர்வு எட்டப்படாது தள்ளிப்போகின்றது.

உண்மை என்று ஒன்றும் இருக்கின்றது. குவைத் நிறுவனத்தைப் பொறுத்தவரை தீவிரவாதிகள் வசமுள்ளவர்கள் தமது நாட்டவர்கள் அல்ல. தமது நாட்டவருக்காக நஷ்டஈட்டுத் தொகை வழங்க முன் வருவது வேறு. இந்தியாவுக்காக நஷ்டஈடு வழங்க வேண்டு மென்று வற்புறுத்தல் வேறு.

அதிலும் பலூஜாவில் மக்களைக் கொன்றொழித்தது அமெரிக்காவும் அதன் கூட்டணிப் படைகளுமே.

அதனால் அமெரிக்காவும், அதன் கூட்டணிப் படை நாடுகளும் செலுத்த வேண்டிய நஷ்டஈட்டை இந்தியர்களின் குடும்பியைப் பிடித்து வைத்துக் கொண்டு, குவைத் நிறுவனத்தினை அச்சுறுத்துவது என்பது வாலைவிட்டுத் தும்பைப் பிடிப்பது போன்றதாகும்.

இதனை குவைத் நிறுவனமும் புரிந்து கொண்டிருக்காமல் இருக்கவும் முடியாது. அதனால்தான், நஷ்டஈடு வழங்குவதில் அது சமரசத்தைக் காண முடியாமல் திணறுகின்றது.




எனவே, குவைத் நிறுவனம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் இந்தியர்களின் உயிர்கள்தான் பலியாகிப்போகும். இந்தியர்களின் உயிர்களைக் காப்பாற்றியே ஆக வேண்டிய நிலை இந்திய மத்தியரசுக்குத்தான் இருக்கின்றது.

ஏனெனில், ஏற்கனவே, கடத்தப்பட்ட இந்தியர்களின் சொந்த மாநிலமான இமாச்சாலைப் பிரதேசத்திலும், பஞ்சாப்பிலும் கடத்தப்பட்டவர்கள் காப்பற்றப்பட வேண்டுமென்று மக்கள் போராட்டங்களில் இறங்கியிருக்கும் நிலையில், ஒரு இந்தியரின் தலை அறுக்கப்பட்டாலும் மத்தியரசின் நிலை மோசமடையும். அதிலும் எதிர்க்கட்சிகள் அதனை பூதகரமாக்கி மத்தியரசை உண்டு, இல்லை என்று ஆக்கியும் விடும்.

எனவே, இந்திய மத்தியரசு ஒன்று செய்ய முடியும். பலூஜா மக்களுக்காக தீவிரவாதிகள் கோரும் நஷ்டஈட்டை குவைத் நிறுவனத்திற்கு இந்தியா தாமே கொடுத்து, குவைத் நிறுவனம் மூலம் தீவிரவாதிகளிடம் சேர்ப்பிக்க முடியும். இதன் மூலம் மூன்று உயிர்கள் மட்டுமல்ல ஏழு உயிர்கள் காப்பற்றப்படலாம்.

இந்த நடவடிக்கையைத்தான் மத்தியரசு மேற்கொண்டிருக்கின்றது போல் தெரிகின்றது. சோனியாகாந்தி தலைமையில் கூடிய அவசர கூட்டத்தில் மூலம் ஓமானுக்கான இந்தியத் தூதுவர் ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றார். இவர் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் அத்துடன், தருணத்திற்கு தக்கபடி முடிவுகள் எடுக்கவும் மத்தியரசு அவருக்கு அனுமதியளித்திருக்கின்றது.

எனவே, மத்தியரசின் இந்தச் செயற்பாடு மூலம் இந்தியர்கள் மீட்கப்படுவது உறுதியாக முடியும்.

ஆனால், தீவிரவாதிகள் இந்தியர்களை விடுதலை செய்யாது அமெரிக்கா, குவைத் சிறைகளிலுள்ள ஈராக்கியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று மீண்டும் முருங்கை மரம் ஏறவும் கூடும்.

இது சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல. குவைத் ஒத்துக் கொண்டாலும் அமெரிக்கா இசைந்து வருவது முடியாத காரியம். தனது நாட்டவரான போல் ஜாங்ஷன் கொல்லப்பட்டபோது இறங்கிவர சம்மதிக்காத அமெரிக்கா, இந்தியா வுக்காக பணிந்து விடும் என்று நிச்சயமாக நம்ப முடியாது.

இதனால், அமெரிக்கா, இந்தியா இடையே நட்பு ரீதியான உறவுகள் பாதிப்படையவும் கூடும். அதனைத்தான் ஈராக்கியத் தீவிரவாதிகளும் எதிர்பார்க்கின்றார்களோ... தெரியவில்லை.

என்றாலும், வெளியுறவு அமைச்சர் நட்வந் சிங், அமெரிக்காவில் உளறுவாயாக உளறியதால் தான் இந்த நிலை ஏற்பட்டதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

எது எப்படியோ... இந்திய மத்தியரசைப் பொறுத்துவரை இந்தியர்கள் விடுதலை செய்யப்படும் வரை கயிற்றின் மேல் நடப்பது போன்றே இருக்கும் என்றால் அது மிகையில்லை எனலாம். ☐

# துர்நடத்தையில் ஈடுபட்ட மூன்று அதிபர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

துர்நடத்தை காரணமாக மேல்மாகாண சபையின் கீழுள்ள மூன்று பாடசாலைகளின் அதிபர்கள் தமது சேவையில் இருந்து இடை நிறுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே இது குறித்து தெரிவிக்கையில்.

பாடசாலையில் மாணவர்களின் முன்னிலையில் கசிப்பு பாவித்தமை, மாணவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தியமை மற்றும் போலியான மாணவர் வரவுப்பதிவேட்டினை பேணி வந்தமை போன்ற துர்நடத்தைகளுக்காகவே இவர்கள் இடைநிறுத்தம் செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டிய அதிபர்கள் இது போன்ற நடத்தைகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என்றும் இத்தகையோருக்கு எதிராக தனது அமைச்சு கண்டிப்பான நடவடிக்கை எடுக்குமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# விலை குறைப்பிற்கு ஜே.வி.பி சிபார்சு

(கொழும்பு)

நாட்டில் அன்றாடம் அதிகரித்து வரும் விலை உயர்வைக் குறைப்பதற்கு ஜே.வி.பி. யின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு அறிக்கை ஒன்றினை நிதி அமைச்சருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

ஜே.வி.பி யினரால் அமைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்கள் விலை குறைப்பு குழுவின் சிபார்சின் பின் இந்த நகல் திட்டம் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் வேதன உயர்வு கோரிப் போராட்டம்

## இ.தொ.ஐ.மு அறிவிப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பாக வெகுஜன போராட்டங்களை நடத்தப்போவதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் டி.வி சென்னன்எச்சரித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பாக அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தொழிலாளர் சார்பில் உரிய வேதன கொள்கைகள் முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் முன்னர் அமுல் செய்த அதே வேதன கொள்கையையே முதலாளிமார் சம்மேளனம் மீண்டும் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக கூறியுள்ள டி.வி சென்னன் இது சர்வதிகார போக்கு எனக் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து திடீரென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலகிக்கொண்டமை யானது பல்வேறு ஊகங்களுக்கும் வழி வகுத்துள்ளது. அவர் ஏன் பதவி துறந்தார்? என்பது குறித்த இந்த ஊகங்கள் ஒரு புறமிருக்க, அடுத்த தலைவர் யார் என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது. இதற்கும் பல ஊகங்கள் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர இணக்கப்பாட்டை மீறி பிரச்சினைகளையெல்லாம் பொது மேடைப்பேச்சு மூலம் வெளிப்படுத்துவதும் அரசைக் கவிழ்க்கப்போவதாகக் கூச்சலிடுவதுமான ஜே.வி.பி.யின் நடத்தைகள் சனாதிபதிக்கு எரிச்சலையூட்டியுள்ளன. எந்த முடிவை வெளியிட்டாலும் தம்மைக் கலந்தாலோசித்துச் செய்யவில்லை என்ற ஜே.வி.பி.யின் கூச்சல் எல்லாம் சனாதிபதிக்குப் பிடித்ததாக இருக்கவில்லை.

அது சமாதான முயற்சிகளில் நகர்வு ஏற்பாட்டாலேயே சாத்தியமாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுயமாக இயங்க விரும்பியமைக்கு இது மட்டும் தான் காரணமல்ல. அவர் அரசியலில் நீடிப்பது என்பது மிக முக்கியமானதோர் காரணமாகும். அவரது பதவிக்காலம் குறித்து சர்ச்சையிருந்தாலும் அடுத்த ஆண்டு டிசம்பரில் அவரது சனாதிபதி பதவிக்காலம் முடிவடை

சந்திரிகா தொடர்வதற்கு மகிந்தராஜபக்ஷ விரும்பமாட்டார். அது அனுராவை நிறைவேற்று அதிகாரப்பதவிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலேயே முடியும் என்பது மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியும்.இந்நிலையில் அடுத்த தலைமைப் பதவிக்கு மகிந்தராஜ பக்ஷ போட்டியிடாவிட்டாலும் அனுரா பதவிக்கு வருவதை விரும்பமாட்டார். ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை விரும்பக்கூடும். அதே

# சந்திரிகாவின் பதவிவிலகல்; தொடரப்போகும் காட்சிகள் எவை?



“உரிய தருணத்தில் நியமிக்கப்படுவார்” என்று மட்டுமே உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

முதலில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்பதவியை ஏன் துறந்தார்? என்ற கேள்விக்கு விடை கிடைத்தாலேயே அடுத்த தலைவர் யார்? என்ற கேள்விக்கு விடை காண முடியும் ஏனெனில் சந்திரிகா வேலைப்பளு காரணமாகவே பதவிவிலகினார் என்ற கூற்றானது உண்மையாக இல்லாத நிலையில், அவர் பதவி விலகிய தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஒருவரையே அவர் கட்சியின் தலைவராக நியமிக்க விரும்புவார்.

அவர் பதவிவிலகியதற்கான காரணம்



ஜே.வி.பியினரின் கெடுபிடி என்பது பலராலும் ஏற்கப்பட்ட விடயம். ஒன்று அவர் தான நினைத்தவாறு எதனையும் செய்யமுடியாத நிலையில் இருப்பது அவர் திட்டமிட்டுச் செய்கின்றாரோ, அல்லது உண்மையிலேயே தேவைகருதிச் செய்கின்றாரோ அமைச்சுத் திணைக்களப் பிரிவுகளைக்கூட மாற்றியமைக்க முடியாத நிலையில் இருப்பது நிரூபணமாகிவிட்டது. அதாவது முக்கிய மூன்று அமைச்சுக்களை ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து பறித்து அரசாங்கத்தைத் ஸ்தம்பிதமடையச் செய்யக் கூடிய வகையில் அதிகாரம் கொண்டிருக்கும் அவரால், ஜே.வி.பி.யின் ஓர் அமைச்சின் திணைக்களத்தின் மூன்று பிரிவுகளைப் பறித்து விட முடியவில்லை என்பது அதனை நிரூபித்திருக்கிறது.

அடுத்ததாக கூட்டமைப்பிற்குள்ளேயே ஜே.வி.பி அன்றாடம் கிளப்பும் சிறுசிறு பிரச்சினைகளுக்கெல்லாம் தலைவர் என்ற முறையில் சனாதிபதி பதிலளிக்க வேண்டியும் சமாதானம் செய்ய வேண்டியுமுள்ளமை; உட்கட்சிப் பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளியிடுவதில்லை என்ற

ஜே.வி.பி.யின் இந்த நடத்தைகள் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறி விமர்சித்து வந்ததாக தகவல்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்து விடுபடும் நோக்குடனேயே அவர் பதவி விலகியிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. அதாவது தனது நிறைவேற்று அதிகாரத்தில் சிறிதளவைக் கூட பயன்படுத்த முடியாத அல்லது பயன்படுத்தினாலும் அதற்கு ஜே.வி.பி.க்கு பதிலளிக்க வேண்டிய நிலையில் இருந்து விடுபடும் நோக்குடனேயே அவர் பதவி விலகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.


எவ்வாறாயினும் அவர் ஜே.வி.பி.யின் பிடியிலிருந்து விடுபட்டு அவர் சில நகர்வுகளை- நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி- மேற்கொள்ளப்போகிறார் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன செய்யப்போகிறார்? என்ற கேள்வி எழுகின்றது.

இனப் பிரச்சினைக்குச் சமாதான வழி மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட ஜே.வி.பி முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்பது ஒரு விடயம். இப்பொழுது பேச்சுவார்த்தை களைத் தொடங்குவதாயின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய நிலை அவருக்கு முக்கிய தேவையாக இருக்கின்றது. ஏனெனில் அவரது ஆட்சி ஏற்பட்டு 4 மாதங்கள் எட்டுகின்ற நிலையில் கொள்கைத் திட்டமோ வரவு செலவுத் திட்டமோ சமர்ப்பிக்கும் நிலை அரசாங்கத்துக்குக்கிட்டவில்லை. இப்பொழுது வரவு செலவுத்திட்டத்திற்கு ஜாதிகஹெல உறுமய ஆதரவு வழங்கப் போவதாகக் கூறுகின்ற போதும், கிடைக்கின்ற வெளிநாட்டு உதவியை மையமாகக் கொண்டே அதனால் வரவு-செலவுத்திட்டத்தை தயாரிக்கமுடியும்.

கின்றது. இதன் பின்னர் அவர் ஓய்வு பெற வேண்டிய நிலையை தற்போதைய அரசியலமைப்பு ஏற்படுத்தியிருக்கிறது.

இதிலிருந்து விடுபடுவது அவரைப் பொறுத்து மிக முக்கியமானது. அதற்காகத் தான் அவர் ஜே.வி.பி.யுடன் இணைந்து கொண்டதும் ஐ.தே.மு ஆட்சியை அவசரமாகக் கலைத்து ஐமசுமு ஆட்சியை ஏற்படுத்தியமையும் ஆகும்.

பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையையே நிரூபிக்க முடியாதிருக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலையில் தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்கி அரசியல் அமைப்பை மாற்றும் திட்டம் சனாதிபதி சந்திரிகாவிடம் உள்ளது. அதனை அவர் விரைந்து நிறைவேற்றவேண்டிய தேவையும் உள்ளது. இவ்விடயத்தில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன? என்பது தெளிவாக வில்லை. அதற்கும் ஜே.வி.பி. முட்டுக் கட்டை யாக இருக்கு மாயின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்ற அதிகாரத்தைக் கைவிடவும் தயங்க மாட்டார். அதாவது ஜே.வி.பி.யின் ஆட்சிக் கவிழ்ப்பு எச்சரிக்கையையும், பொருட்படுத்த மாட்டார். தனக்குள்ள நிறைவேற்று அதிகாரம் மூலம் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை அவர் நடத்தவும் கூடும்.



ஆனால் இவ்விடயத்தில் அவரது சொந்தக் கட்சியின ரின் ஆதரவு அவருக்கு இன்றியமையாததாகும் அவ்வாறானதொரு நிலையில் அதற் கேற்றால் போன்றோரையே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தலைவர்களாக வைத்திருக்க அவர் முயல்வார்.

இந்நிலையில் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியிலுள்ள செல்வாக்கு அவருக்கு அச்சுறுத்தலாகும். அதாவது நீண்டகாலப் பகுதிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி அல்லது பிரதமர் பதவியை

வேளை ஜே.வி.பி.யுடனான கூட்டில் ஆரம்பம் முதலே பட்டும் படாமல் இருந்துவந்த மகிந்தராஜபக்ஷ கூட்டுக் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்று தலைவலிக்குள் சிக்கமுயல்வாரா? என்பதும் கேள்விக்குரியதாகும்.

ஆனால் அனுராபண்டாரநாயக்க ஆரம்பம் முதலே ஜே.வி.பி.யுடனான கூட்டை வலியுறுத்தியவர். கூட்டு ஏற்படாவிட்டால் சகோதரி சந்திரிகாவுக்கு எதிராகவும் செயற்படத் துணிந்தவர். ஜே.வி.பி.யுடன் இணங்கிச் செயற்படும் வல்லமை தமக்கு உண்டு எனத் தம்பட்டம் அடித்து வருபவர் அத்துடன் அப்பதவியைப்பற்றி பிடித்துக்கொண்டால் சுதந்திரக்கட்சித் தலைமையைப் பிடித்துக்கொள்வதில் தனக்குள்ள பலவீனத்தைப் போக்கமுடியும் என அவர் கருதுகிறார். எனவே அப்பதவியை அவர் விரும்புகிறார்.ஆனால், இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மகிந்தராஜபக்ஷவுக்கு எதிராகவும் சனாதிபதி சந்திரிகா நடந்துகொள்ளத் தயக்கம் காட்டுவார். எனவே ரட்ணசிறி விக்கிரமநாயக்க அல்லது அவரைப்போன்ற ஒருவர் தலைமைப்பதவிக்கு தெரிவாக சந்தர்ப்பம் உண்டு.

ஆனால் இம்மாற்றங்கள் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தனது அரசியல் வாழ்வுக்காலத்தை நீடிக்க உதுவுமா? எவ்வாறு அதனைச் செய்துமுடிக்கப் போகிறார்?ஜே.வி.பி,யினர் மகிந்தராஜபக்ஷ ஆகியோர் என்னசெய்யப்போகிறார்கள்? இவை தொடரும் கேள்விகளாகும்.

வேலவன்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜே.வி.பி தெளிவான நிலைப்பாட்டில் இல்லை

## -திஸ்ஸ அத்த நாயக்க பா.உ தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்தெளிவான நிலைப் பாட்டில்இல்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி யின் உறுப்பினர்கள் தேசியப்பிரச் சினை தொடர்பாக இடையி டையே வெவ்வேறான கருத்துக் களை வெளியிட்ட வண்ணமுள்ள தாகவும் திஸ்ஸஅத்த நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலைமுன்னணி கடந்த சில வாரங்களுக்கு முன் னர் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் வெளியிட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை குறித்துக் கவனம் செலுத்தப்படு மாயின் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதாக கூறியிருந்தனர்.

ஆனால் கடந்த வியாழனன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர் மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் விவசாய அமைச்சர் அநுர குமார திஸ்ஸ நாயக்க இதற்கு முற்றிலும் மாறான கருத்தை தெரிவித்திருந் தார்.இந்த நிலைப்பாடு அரசியல் கட்சிகளின் மத்தியில் காலத்திற்கு காலம் மாற்றமடையும் எனவும் அவர் கூறியுள்ளாரென அவர் மேலும் தெரிவித்தார்.

# இருகுழுக்களிடையே வாக்குவாதம் கைக்குண்டுவீச்சில் முடிந்தது

## - ஏழுபேர் காயம்

(கொழும்பு)

இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் முடிவில் கைக்குண்டு வீசப்பட்டதில் ஏழுபேர் காயமடைந்த சம்பவம் சிறிலங்கா வின் அப்பல்வத்தயில் இடம்பெற்றுள்ளது.

சென்ற திங்கள் இப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தையடுத்து இரண்டு குழுக்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து இக்கைக்குண்டு வீச்சு மேற்கொள் ளப்பட்டதாகவும் இதன்போதே 07பேர் காயமடைந்து பலூபோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மௌன்ட்லவே னியா பொலிசார் தெரிவித்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட நபரொரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சமாதானப் பேச்சுக்களுக்குப் புலிகளை நோர்வேயால் கொண்டுவர முடியாதுள்ளது

## ~ பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

நோர்வே பிரதிநிதிகளால் விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வர முடியாதுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமா தான அமைச்சருமான ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளா.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளு டன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரை யாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர்,

நோர்வே அரசின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளைப் பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வருவதற்காக பெருமளவில் முயற்சிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டு வருவது முக்கியத்துவம் வாய்ந்தது.

விடுதலைப்புலிகள் சில யோச னைகளை முன்வைத்துள்ளனர். அரசும் சில யோசனைகளை முன் வைத்துள்ளது.

இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் இரு தரப்பினரு டனும் நோர்வே பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகின்றனர். அமைதியான சமு தாயம் ஒன்றை நோக்கிச்செல்லும் இந்தப் பாதையில் கோபதாபங் களை விட்டு விலக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஐ.தே.க விலிருந்து எண்மர் நீக்கம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை சேர்த்த 8 மாகாண சபை உறுப்பி னர்கள் கட்சியின் சட்டங்களையும் கொள்கைகளையும் மீறி செயற் பட்டதால் அவர்களைக் கட்சியிலி ருந்து நீக்குவதற்கு கட்சி உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தால் பொதுமக்களுக்கு பாரிய தீங்கு ஏற்படும்

## - மு.கா பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் மையம் மக்கள் மீது திணிக் கப்பட்டால் மக்களை ஒன்று திரட்டிப் போராட்டத்தை நடத்தப் போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் கே. ஏ பாயிஸ் எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கை பாராளு மன்றத்தில் விடுக்கப்பட்டுள்ளது நுரைச் சோலையில் அனல் மின் மையம் அமைக்கப்படுவதன் அவசி யத்தை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த வலியுறுத்திய போதே இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

மேற்குலக நாடுகளில் இன்று அனல் மின் மையங்கள் மூடப் பட்டு வருகின்றன. அமெரிக்கா அதற்கு சிறந்த உதாரணமாகும், ஜேர்மன் மற்றும் ஜப்பானிலும் அனல் மின் மையங்களின் தாக் கங்கள் உணரப்பட்டுள்ளன. அனல மின் மையங்கள் காரணமாக சுற்றாடலில் ஏற்படும் மாசுக்கள் மனிதனில் புற்றுநோயை ஏற்படுத் தும் ஏதுக்களை கொண்டிருப்பதாக மருத்துவத்தகவலை சுட்டிகாட் டிய கே. ஏ பாயிஸ் அனல் மின் மையங் கள் காரணமாக அமில மழை பெய் வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் குறிப்பிட்டார். புத்தளம் அனல் மின் மையம் காரணமாக ஏற்படும் அமில மழை தாக்கம் புத்தளம் மற்றும் அனு ராத புரமா வட்ட மக்களைப் பாதிக்கக் கூடும் என்ற எச்சரிக்கைய்யையும் பாராளுமன்ற உறுப்பினர் விடுத்தார்.

# சுங்க அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் ஐவர் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

சிறிலங்காவில் அதிகரித்து வருகின்ற சுங்க அதிகாரிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் கார ணமாக ஐந்து சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளி யேறியுள்ளதாக முன்னாள் சுங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது. அண்மை யில் சுங்க அதிகாரிகள் தமது கடமைகளை சரியாகச் செய்யுமுடியாத அளவிற்கு அரசியல் தலை யீடுகள் அதிகரித்துள்ளன. இதனால் சுங்க அதிகாரிகள் தமது கடமை களைச் சீராக நிறைவேற்ற முடியா துள்ளதாக மேலும் தெரி விக் கப்பட்டுள்ளது. சுங்கப்பகுதி யில் நடைபெறுகின்ற பல முறை கேடுகளைக் கண்டறியும் சுங்க அதி காரிகள் மீது கொலை அச்சு றுத்தல்கள் விடுக்கப்படுவதுடன், சிலர் மீது தாக்குதல்களும் நடத் தப்பட்டுள்ளன. இதனால் தமது உயிர்களை பாதுகாத்துக் கொள் வதற்காக சுங்க அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)


## வீரவணக்கம்

### 03 ஆம் ஆண்டு நினைவலைகளில்



தமிழீழ தேசிய துணைப்படைவீரர்

## க.ஜோன்பெனடிற்

தாயக மண்ணில் 08 ★ 08 ★ 2001

நி.மு. யாழ்.மாவட்டம்

த.மு. முதலாம் வாய்க்கால் பிரமந்தனாறு, விசுவமடு.

பாலமோட்டைப் பகுதியில் 08.08.2001 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல் துறை சிறப்புப்படையணியினர்"

(4883)



## கேள்வி அறிவித்தல்

வலயக்கல்விப்பணிப்பாளர், முல்லைத்தீவு அவர்களால் பின்வரும் வேலைக்கு மூடிய கேள்விகள் இக்ராட்டுடன் பதிவுசெய்த தரம் 7 தகைமையுள்ள கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000 வலயக்கல்விப் பணிமனையில் 26.08.2004ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு முன்னர் செலுத்திக் கேள்விப்பத்திர ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் அனைத்தும் 30.08.2004ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகத் தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, முல்லைத்தீவு என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும். இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இக் கேள்விப் பத்திரத்தைப் பெற்று கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

### வேலை விபரம்:-

01. க.பொ.த.(சாதாரணம்) விஞ்ஞானகூடம் அமைத்தல்.

மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தகாரர்கள் வேலைக்குரிய பிணைப்பணத்தை காசாக வலயக்கல்விப் பணிமனையில் 07.09.2004ஆம் திகதிக்கு முன் செலுத்தி உரிய ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங் களை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. குருகுலராசா,
தலைவர், வலயக்கல்விப்பணிப்பாளர்,
கேள்விச்சபை,
வலயக்கல்விப்பணிமனை,
முல்லைத்தீவு.

(சி-9774)

# பாடசாலையை இயங்க அனுமதித்துள்ள படையினர்
# அதனைத் துப்புரவு செய்ய தடை விதிக்கின்றனர்

### வசாவிளான் மகாவித்தியாலயம் குறித்து வலயக் கல்விப்பணிப்பாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

**அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் சொந்த இடத்தில் மீள இயக்க ஏதுவாக ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்த முடியாதபடி இராணுவம் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.**

அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் உள்ள வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தை மீள இயக்க படைத்தரப்பு அனுமதித்துள் ளது. ஆயினும் பாடசாலையினை அண்டிய சூழலை துப்புரவு செய்யவோ, இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கோ படைத் தலைமை தொடர்ந்தும் அனுமதி மறுத்துவருகின்றது.

மேலும் பாடசாலை வேலைக்கான கட்டடப் பொருட்களையோ, அல்லது தொழிலாளர்களையோ உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க சோதனைச் சாவடியான வசாவிளான் ஊடாக கொண்டு செல்ல முடியாதிருப்பதாகவும் அவர் கல்வி அமைச்சின் செயலாளர் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். (27)

# அதிபர், ஆசிரியர் விடுதிகளை திருத்தித்தரக் கோரிக்கை

### – தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கடிதம்

(தீவகம்)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் சேதமுற்றுள்ள அதிபர், ஆசிரியர் விடுதிகளை திருத்தம் செய்து தருமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வட-கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலரைக் கோரியுள்ளது.

நயினாதீவு மகாவித்தியாலயம், அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் வலயக் கல்விப் பணிமனை விடுதிகள்இரண்டு என்பனவற்றையே திருத்தஞ் செய்ய நிதி வாய்ப்புக்களைச் செய்து தருமாறு அவர் கோரியுள்ளார்.

சுமார் 27 இலட்சம் ரூபா இதற்கென செலவிடப்படவேண்டுமென தெரிவித்துள்ள தீவகக் கல்விப்பணிப்பாளர் இவை நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாதவிடத்து இவ்விடுதிகள் முழுமையாக அழிவுறும் அபாயமுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிறபகுதிகளிலிருந்து இப்பகுதிக்கு கற்பிக்கச் செல்லும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் போதிய வசிப்பிட வசதியற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது. (27)

# ஒப்பந்தகாரரின் முறையற்ற போக்கால் கட்டட வேலைகள் ஸ்தம்பிதமடையும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற பாரிய ஒப்பந்த வேலைகள் பலவும் ஒப்பந்தகாரர்களது முறையற்ற போக்கினால் இடைநிறுத்தப்படுகின்ற சூழல் ஏற்பட்டிருப்பதாக அச்சந் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களாலேயே இந்நிலை தோன்றியிருப்பதாக தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. குறிப்பாக யாழ்.குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்குப்பகுதியில் இடம் பெற்று வருகின்ற பாடசாலை கட்டட நிர்மாணப்பணிகளிலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பல பாடசாலைகள் பெரும அழிவுகளைச்சந்தித்திருந்தன. இந். நிலையில் சர்வதேச நிதி நிறுவனங்களின் இப்பாடசாலைக் கட்டடங்களை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆயினும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இவ் ஒப்பந்தகாரர்களது சீரற்ற நிர்மாண வேலைகளால் அப்பணிகள் தடைப்பட்டுப் போவதுடன் நிதி முழுமையாகப் பயன்படுத்த முடியாது திரும்பலாமெனவும் அச்சம் வெளியிடப்படுகின்றது.

இந்நிலையில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ். குடாநாட்டிலும் இவ்வாறான பாடசாலை கட்டுமானப்பணிகளில் ஈடுபட தற்போது பெரும்பான்மையின ஒப்பந்தகாரர்கள் முன்வந்துள்ளனர். அச்சுவேலிப்பகுதியில் உள்ள இருபாடசாலைகளின் கட்டுமானப்பணிக்கான ஒப்பந்தகாரர்களாக இவர்கள் வட-கிழக்கு மாகாண சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (27)

# வேலைத்திட்டத்தை முன்னெடுக்க கல்வயல் தே.எ.பேரவை முடிவு

(தென்மராட்சி)

கல்வயலிலுள்ள தேசிய எழுச்சிப் பேரவையினர் சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தென்மராட்சித் தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் உள்ள கிளைகளை புனரமைத்தல், புதிதாக தேசிய எழுச்சிப் பேரவையின் அங்கத்தினர்களை இணைத்தல், கிராம மக்களைச் சந்தித்து இப்பகுதி மக்களின் தேவைகள் குறித்து க[illegible]டல் ஆகியன மேற்கொள்ளப் படவிருப்பதாக தெரியவருகிறது. இதற்கான கூட்டம் கல்வயல் புளுட்டையான் பிள்ளையார் ஆலய[illegible]ன்றலில் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (28)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பக்தர்கள்மீது இராணுவம் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் உள்வாங்கப்பட்டிருப்பதால் படையினர் இவ் ஆலய உற்சவங்களுக்குச்செல்ல பக்தர்களுக்குப் பல் வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

தமது பாதுகாப்புக் காரணங்களுக்காகப் படையினர் விதித்துள்ள இக்கெடுபிடி நடைமுறைகளால் தேர்த்திருவிழாவினைச் சிறப்பாகக் கொண்டாட முடியாத நிலை தோன்றியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (33)

# ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஒய்வூதியத்திட்டம் அறிமுகம்

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் பணியாற்றும் வைத்தியர்களுக்கு அரசு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை, ஆயுர்வேத வைத்தியசாலை அமைந்துள்ள, அந்தந்தப் பிரிவுக்கான கிராம அலுவலர் அலுவலகத்தில் பெற்று, வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்கும்படி ஆயுர்வேத வைத்தியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (28)

# சுதந்திரமான மீன் பிடித் தொழில் கடற்படையின் நடவடிக்கையால் பாதிப்பு

### - நெடுந்தீவு மீனவர் கவலை

(தீவகம்)

யாழ். தீவகத்தில் உள்ள நெடுந்தீவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடச் செல்லும் போது கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் தமது படகுகளில் கொடிகளை பறக்க விடுவது அவசியம் என கடற்படையினர் வலியுறுத்தியுள்ளனர்.

கடற்றொழிலாளர்களால் இதனை இலகுவில் இனம் கண்டு கொள்வதற்காகவும், பாதுபாப்புக் காரணங்களுக்காகவும் கடற்படையினர் இதனை மிகவும் இறுக்கமான முறையில் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது..

தற்போதைய யுத்தநிறுத்த சூழ்நிலையிலும் சிறிலங்கா கடற்படையினர் தமது பாதுகாப்புக் கருதி அமுல்படுத்திவரும் இந்நடைமுறையால் தமது சுதந்திரமான மீன் பிடித்தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (33)

# கால்வாயைப் புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தின் நகர்ப் பகுதிகளில் கடந்த யுத்த காலங்களில் உடைந்து, கழிவு நீர்கள் வெளியேற முடியாமல் தூர்ந்து போயுள்ள கால்வாய்களை மீண்டும் புனரமைத்துப் பயன்படுத்த நகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து தனங்கிளப்பு வீதி சந்தை முடியும் வரை உள்ள கால்வாய்களே புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கென ரூபாய் இரண்டரை இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் தெரிவிக்கின்றார். (28)

# கைதடி தபால் நிலையத்தில் ஊழியர் நியமனத்தில் முறைகேடு

### - விண்ணப்பதாரிகள் குமுறல்

கைதடி பிர்தான தபால் நிலையத்தில் ஆறு வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்ட நிலையில் மேலிடத்து செல்வாக்கினால் திடீரென ஒருவ்ர் எந்த ஒரு தேர்வும் எழுதாமல் இந்தத் தபால் நிலையத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதனால் வேலைகேட்டு விண்ணப்பித்த 75இற்கும் மேற்பட்டவர்கள் விரக்த்தியுற்றுள்ளனர். சில மேலதிகாரிகளின் துணையு டன் எந்த ஒரு தேர்வும் இடம் பெறாத பொழுதும் விண்ணப்ப முடிவுத் திகதி 23.08.2004 என இருக்கையில் இவர் பின் வாசல் வழியாக உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதனால் விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் மற்றும் பணிநியமனத்திற்காய் விண்ணப்பங்களை அனுப்பி வருகின்றவர்கள் இதனால் பாதிக்கப்படும் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உடனே நடவடிக்கை எடுத்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் யாழ். தபால் அதிபர் கவனத்திற்கு பாதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கொண்டு சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# சாவகச்சேரியில் இலவசக் கணினிப்பயிற்சி நிலையம்

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினால் நிர்வகிக்கப்படும் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இலவச கணினிப்பயிற்சி நிலையம் (TITA) , டச்சு வீதி சாவகச்சேரியில் இன்று காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பதிவு மற்றும் பரீட்சைக் கட்டணம் உட்பட எந்தவொரு கொடுப்பனவையும் மாணவர்களிடமிருந்து வசூலிக்காமல் முற்றிலும் இலவசமானதாக இந்த நிலையம் இயங்க இருக்கின்றது.தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "கிராமிய தகவல் தொழில்நுட்ப செயற்திட்டத்தின்" பங்காளிகளாக இணைந்துள்ள லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தின் நிதியுதவியின் கீழ் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினால் இந்த நிலையம் நிர்வகிக்கப்படுகிறது.மேற்படி நிலையத்தில் வசதி குறைந்த மாணவர்கள் எவரும் இலவசமாகக் கணினிக் கற்கையை மேற்கொள்ளமுடியும் எனவும், கற்கைக் காலத்தில் இலவசக் கல்வியைத் துஷ்பிரயோகம் செய்யாமலிருப்பதற்காக பொருத்தமானவர்களின் சிபார்சுடன் விண்ணப்பிக்கவேண்டும் எனவும் நிலையத்தின் இணைப்பாளர் எம்.அருட்குமரன் தெரிவித்துள்ளார். (28)


## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

அனுபவம் வாய்ந்த சிங்கள, ஆங்கில (தமிழ் மொழிக்கு) மொழிபெயர்ப்பாளர்கள் தேவை.

உணவுடன் கூடிய தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். ஊதிய விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வயதெல்லை:- 30இற்கு மேல்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்ப முடிவுத்திகதி:- 18.08.2004

சுயவிபரம் அடங்கிய தங்கள் விண்ணப்பங்களைத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

விளம்பர இல-60
ஈழநாதம் பணிமனை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(4901)

# காலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தெ.ஆபிரிக்கா வெற்றி பெற 325 ஓட்ட இலக்கு



சிறிலங்கா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் காலியில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறுவதற்கு தென்னாபிரிக்க அணிக்கு 325 ஓட்ட இலக்கை சிறிலங்கா அணி நிர்ணயித்துள்ளது.


தனது முதல் இனிங்சிற்காக மூன்றாம் நாளான நேற்று முன்தினம் 07 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி நான்காம் நாளான நேற்று 376 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ருடெல்வ் மிகச்சிறப்பாக ஆடி 102 ஓட்டங்களைப்பெற்றார். ஜக்கலீஸ் 59 ஒட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும், ஜெயசூரிய 2 விக்கெட்டுக்களையும் •கைப்பற்றினர்.

110 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த சிறிலங்கா அணி 214 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதில் ஜெயசூரிய 74 ஓட்டங்களைப்பெற்றார். அவருக்கு துணையாக எவரும் துடுப்பெடுத்தாடாததால் சிறிலங்கா அணி தட்டுத்தடுமாறி மேற்படி ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

பந்து வீச்சில் நிக்கிபோயே



மிகச்சிறப்பாகப் பந்துவீசி 5 விக்கெட்டுக்களையும், போலக் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

காலி மைதானத்தில் இதுவரை 6 ஓட்டங்களையே அதிகப்படியான ஓட்டங்களாக இறுதி இனிங்சில் பெற்று சிறிலங்கா அணி இரண்டு தடவை வெற்றி பெற்றுள்ளது. இதற்குப்பின் யாரும் அதிகப்படியான ஓட்டங்களை நான்காவது இனிங்சில் பெற்று வெற்றியீட்டியதாக சரித்திரம் இல்லை.




அந்த சரித்திரத்தை இன்று தென்னாபிரிக்க அணி மாற்றிய மைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இறுதி நாளான இன்று 318 ஓட்டங்கள் தேவையான நிலையில் 10 விக்கெட்டுக்கள் தென்னாபிரிக்காவின் கையில் உள்ளது. நேற்றையதினம் 3 ஓவர்களை எதிர்கொண்ட தென்னாபிரிக்கா விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதுவரை காலி மைதானத்தில் நடைபெற்ற பத்து டெஸ்ட் போட்டிகளில் சிறிலங்கா அணி 4 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இன்றைய போட்டி எப்படி அமையப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# இறுதியாட்டத்தில் தோற்றதற்காக கோமாளிகள் என்பது முறையற்றது

## கப்டன் கங்குலி




இந்தியக் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளராக ராவிட் தொடர்ந்தும் நீடிப்பார் என்று அணித்தலைவர் கங்குலி கூறினார்.

இங்கிலாந்தில் செப்ரெம்பர் 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறும் ஐ.சி.சி. சம்பியன் கிரிக்கெட் போட்டிக்கான எல்.ஜி.கோப்பை அறிமுக நிகழ்ச்சி டெல்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்து கொண்ட இந்திய அணித்தலைவர் கங்குலி நிருபர்களிடம் கூறியதாவது,

இந்தியஅணி அதிக இறுதிப் போட்டிகளில் தோல்வி கண்டிருப்பதை ஏற்றுகொள்கிறேன். சில இறுதி ஆட்டங்களில் வென்றும் இருக்கிறோம்.இறுதிப்போட்டியில் எங்களது அணுகுமுறை பற்றி மறுபரிசீலனை செய்து வருகிறோம்.

இறுதி ஆட்டத்தில் தோற்றதற்காக 'கோமாளிகள்' என்று வர்ணிப்பது முறையற்றதாகும். அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக உலகின் எல்லா இடங்களிலும் நடந்த போட்டியில் இந்தியா வென்றுள்ளது. இலங்கை அணி சொந்த மண்ணில் தான் வெற்றி பெற்றுள்ளது.

தினேஷ் கார்த்திக் அணியில் சேர்க்கப்பட்டாலும் ராவிட்டே ஒரு நாள் போட்டியில் விக்கெட் காப்பாளராக நீடிப்பார். டிராவிட் காயம் அடைந்தால் மட்டுமே தினேஷ் கார்த்திக்கிற்கு வாய்ப்புக் கிடைக்கும். இவ்வாறு கங்குலி கூறினார்.

# எனக்கான இலக்கை வோர்ன் நிர்ணயிப்பார் அதுவரை கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும்

-முரளிதரன்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக் காலியில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் கர்ஸ்வெல்டை ஆட்டமிழக்கச் செய்த முரளிதரன் மீண்டும் உலக சாதனைக்குரியவரானார்.

வோர்னை முந்திய முரளிதரன் இது குறித்து தெரிவிக்கும்போது,

இதில் கொண்டாடுவதற்கு ஒன்றுமில்லை. வோர்னும் நானும் ஆடிக்கொண்டிருக்கும்வரை ஒருவரையொருவர் முந்திக் கொண்டுதான் இருப்போம். அடுத்த தொடரில் அவர் பந்து வீசும் போது விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் முதலிடத்தைப் பிடித்துவிடுவார்.இருவரில் ஒருவர் ஓய்வுபெறும் வரை இந்த கண்ணாமூச்சி ஆட்டம் தொடரும். அநேகமாக அவர் எனக்கு முன்னதாக ஓய்வு பெற்று எனக்கான இலக்கை நிர்ணயிப்பார் என்று நினைக்கின்றேன்.

இம்முறை காலி ஆடுகளத்தில் நான் நினைத்தது போன்று பந்து திரும்பவில்லை தவிர, தென்னாபிரிக்க வீரர்கள் என்னுடைய பந்துவீச்சை எதிர்கொண்டு அழகாக ஆடினார்கள். ஒருவேளை இரண்டாவது இனிங்சில் இந்த ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக மாறலாம் என்றும் முரளிதரன் தெரிவித்தார்.

# ஆசியக் கிண்ண கால்பந்து போட்டி ஜப்பான் அணி சம்பியனானது




ஆசியக் கிண்ண கால்பந்து சம்பியனாக ஜப்பான் அணி தெரிவாகியது. சீனத் தலைநகர் பீஜிங்கில் இன்று நடைபெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தில் போட்டியை நடாத்தும் சீன அணியை 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் ஜப்பான் அணி தோற்கடித்து சம்பியனானது.

65000 ரசிகர்கள் கண்டு களித்த இவ்விறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஜப்பான் தன்னை ஆசிய சம்பியனாக முடிசூடிக் கொண்டது.

இரண்டாவது தடவையாக ஆசிய சம்பியனாக தெரிவாகியுள்ள ஜப்பானுக்கு இது மிகப் பெரிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் சீனா அணி சார்பில் லீஜிங் ஒரு கோலை போட்டார். ஜப்பான் அணி சார்பில் குரோசி, கொய்சின் ஆட்டா, ரமாடா ஆகியோர் கோல் போட்டனர்.




# மாவட்டங்களுக்கிடையிலான பெண்கள் காலபந்துப் போட்டி மன்னார் அணியை தோற்கடித்தது கிளிநொச்சி அணி

வடகிழக்கு மாகாணசபையின் விளையாட்டமைச்சினால் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பெற்ற மாவட்டங்களுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி அணி சம்பியனாகி பதுளையில் நடை பெறவுள்ள மாகாணங்களுக் கிடையிலான போட்டியில் பங்கு பெறும் தகுதியைப் பெற்றுள்ளது.

நேற்றுமாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் அணியை 8-0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணி வென்றது.

முன்னதாக காலை 8 மணியளவில் தமிழீழ தேசியக் கொடி யேற்றலுடன் போட்டித் தொடர் ஆரம்பமானது. கிளி. மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

யாழ்ப்பாண அணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணியும், திருமலை அணியுட னான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தன.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் அமலன், அநுரகாந்தன், நித்திலநாயகம் ஆகியோர் கடமையற்றினர்.

தொடர்ந்து கிளிமாவட்ட விளையாட்டு அலுவலர் சு-கனகராசா தலைமையில் நடை பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா,வட-கிழக்கு- மாகாண உதவி விளையாட்டுப் பணிப்பாளர் K.W விமலராஜன், கிளி.அரச அதிபர் திரு.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

இரண்டாம் இடத்தைப் பெற்ற மன்னார் அணிக்குரிய கேடயத்தை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்காவும்



முதலிடத்தைப்பெற்ற கிளி. அணிக்கான கேடயத்தை அரச அதிபர் தி.இராசநாயகமும் வழங்கிக் கௌரவித்தனர்.



கிளி -அணி

# முல்லை. மாவட்ட விளையாட்டுப் போட்டி புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு முதலிடம்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு விழா 04-08-2004, 05-08-2004 ஆகிய இருநாட்களும் கச்சேரி நிர்வாக அலுவலர் திரு.வே.இரத்தினராஜா தலைமையில் முல்லை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முல்லை மாவட்டத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து வீரவீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இடைவேளையின் போது முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவிகளின் உடற்பயிற்சி கண்காட்சி -இசையும், அசைவும் நடைபெற்றது.


இப்போட்டியில் 217 புள்ளிகளைப் பெற்று புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவு முதலாம் இடத்தையும், 88 புள்ளிகளைப் பெற்று துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவு இரண்டாம் இடத்தையும், 73 புள்ளிகளைப் பெற்று கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவு மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவு நீளம்,தத்தி மிதித்து பாய்தல், தடைஓட்டம் என்பனவற்றில் முதலாம் இடத்தைப் பெற்று துணுக்காய் உதவிஅரச அதிபர் பிரிவு வீராங்கனை செல்வி கந்தசாமி அனித்தா வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்.

முதலாம் இடத்தைப் பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரச அதிபர் பிரிவிற்கான வெற்றிக் கேடயத்தினை கச்சேரி நிர்வாக அலுவலர் திரு.வே.இரட்ணராஜா வழங்கினார். (20)



மன்னார் அணி

படம் -செல்வா



## சிந்தனைக்கு

பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையைப் பெற்றதாகக் கூறமுடியாது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 08-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## சந்திரிகாவின் தனி வழி?

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்லும் விடயத்தைத் துரிதமாகச் செயற்படுத்துவதற்காகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். என்ற அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீரவின் கூற்றுக்கள் சனாதிபதி சந்திரிகா தனி வழிபோகத் தீர்மானித்துள்ளாரா? என்ற கேள்வியையே எழுப்புவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தமையானது, ஜே.வி.பி யினருடனான கருத்து வேறுபாடு காரணமாகவே என்பது வெளிப்படையானது. இதனை அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர பூசி மெழுகிவிட முயற்சிகள் மேற்கொண்டாலும் அதனால் பயன் ஏதும் கிட்டிவிடமாட்டாது. ஏனெனில் இம் முரண்பாடுகள் குறித்த தகவல்கள் ஏற்கனவே வெளிவந்தவையாகவும் காணப்பட்டவையாகவுமே உள்ளன.

ஆகையினால், மங்கள சமரவீர கூறுவது போன்று சனாதிபதி சந்திரிகா பதவி விலகுவதன் மூலம், எந்த வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்பவர் ஆகின்றார்?

சனாதிபதி ஜே.வி.பி க்கு விளக்கம் அளிக்கும் கடப்பாடு இல்லாதவராவதால் மட்டும் அவரால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியுமா? அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விடயத்தில் இதுவரை சனாதிபதியினாலோ அன்றி அவரது சிரேஷ்ட அமைச்சர்களாலோ ஜே.வி.பி யை வழிக்குக் கொண்டுவரமுடிய வில்லை, என்பது யதார்த்தமாகும். தன் னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால், கட்சியில் இருந்து விலகப்போவதாக ஜே.வி.பி தொடராக எச்சரித்து வருகின்றது. சனாதிபதி ஐ.ம.சு முன்னணித் தலைமைப் பதவியில் இருந்து விலகிய பின்னரும் ஜே.வி.பி யின் நிலைப்பாடு அவ் வாறானதாகவே உள்ளது. இந்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஒரே வழியாகவுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர் பானதாக பேச்சுவார்த்தைகளை சனாதிபதி ஆரம்பிப்பதன் மூலம் ஜே.வி.பி யின் நிலைப்பாட்டுக்கு மாறானதொரு நடவடிக்கைக்கு முன்வருவாரா? அதாவது ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்துக் கேள்வி ஒன்றை எழுப்பத் தயாராவாரா?

ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் ஒரு கூட்டணி அரசாங்கத்தை நடத்துவதற்கு ஏற்றதாக இல்லை. என்பது உணரப்பட்ட தொன்றாகவே இருப்பினும் ஜே.வி.பி யின் தற்போதைய அரசியல் நிலைபலம் இன்று ஜே.வி.பி யைப் புறம்தள்ள முடியாததொரு நிலையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

ஆனால் ஜே.வி.பி இத்தகைய அரசியற்பலம் பெறுவதற்கும் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியே காரணமாகும். ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை வெளியேற்ற மேற்கொண்ட அரசியற் குறுக்குவழி காரணமாகவே ஜே.வி.பி அரசியலில் பலம்பெற வாய்ப்பு ஏற்பட்டது.

ஆனால் இன்றைய நிலையில் ஜே.வி.பி மீது சனாதிபதி சந்திரிகா எத்தகைய சீற்றம் கொண்டாலும் ஜே.வி.பி யை அவரால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியுமா? என்பது கேள்விக்குரியதே. ஐ.ம.சு முன்னணித் தலைமைப்பதவியிலீருந்து அவர் வெளியேறியதன் மூலம் ஜே.வி.பி க்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அவருக்கு இல்லாது போகலாம். ஆனால், ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாட்டை அவரால் மேற்கொள்ள முடியுமா? அதாவது அமைச்சரவைப் பேச்சாளர் மங்களசமரவீர கூறுவதுபோன்று சனாதிபதி சந்திரிகாவினால் சமாதான முயற்சிகளைத் தமது விருப்பிற்குரிய முறையில் முன்னெடுத்துச்செல்லமுடியுமா? இதன் மூலம் ஜே.வி.பி.யை மீறிய தான நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியுமா? அவ்வாறானதொரு நடவடிக்கை மூலம் ஜே.வி.பிக்கு அவரால் சவால் விட முடியுமா? ஏனெனில் ஜே.வி.பி யுடன் அவரது சவாலானது ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடும். இதன் மூலம் சனாதிபதி சந்திரிகாவின் எதிர்கால அரசியல் அபிலாசைகள் நிராசையாகிப் போகலாம்.

ஏனெனில் ஜே.வி.பி யின் நிலைப்பாட்டிற்கு மாறானதொரு நிலைப்பாட்டிற்கு சந்திரிகா செல்வாரெனில், அவர் தனது கடந்த கால அரசியல் எதிர்பார்க்கைகளை கைவிட்டுவிட்டார். அன்றி மாற்றிக் கொண்டுவிட்டார். என்பதே அர்த்தமாகியிருக்கும்.

# மேல்மாகாணத்தில் அவசரகாலச் சட்டம் அமுல்செய்ய வேண்டிய அவசியமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

மேல் மாகாணத்தில் அவசர சட்டத்தை அமுல்செய்யவேண்டிய அவசியம் கிடையாதென்று அரசாங்கம் வலியுறுத்தித் தெரிவித்துள்ளது. வாரப்பத்திரிகையொன்றில் வெளியான செய்தி குறித்து விளக்கமளித்த பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது

மேல்மாகாணத்தில் மாத்திரம் அவசர காலச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் திட்டமிட்டு வருகின்றன என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது ; ஆனால் இத்தகைய தேவைஎதுவும் இப்பொழுது ஏழவில்லையென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணதிராஜா தெரிவித்துள்ளதுடன் நாடு முழுவதற்குமான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே அமுல் செய்து வருகின்றதென்றும் கூறினார்.

### அரச நிறுவனங்களில் உயர் பதவிகளுக்கு

# ஒழுங்கீனமான நியமனங்களை தவிர்ப்பதற்கு ஆலோசனை

சிறிலங்கா அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளுக்கு ஒழுங்கீனமான முறையில் மேற்கொள்ளப்படும் நியமனங்களை தவிர்ப்பதற்கான அறிவுரைகள் அடங்கிய தொகுதியொன்றை உள்ளூர் சிவில் உரிமைகள் குழுக்கள் முன்வைத்துள்ளன. இது சம்பந்தமான நகல் விதப்புரைகளை அமைப்பு ஒன்று ஏற்கனவே தயாரித்துள்ளது என்று சிவில் உரிமைகள் குழுவின் பேச்சாளர் கிர்ஷ்ணஸ் வர்ண சூரிய தெரிவித்தார். இந்த நகல் விதப்புரைகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு இவை சம்பந்தமான பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்படுமென்றும் வர்ண சூரிய மேலும் கூறியுள்ளார். இதனடிப்படையில் பொதுமக்கள், சிவில் குழுவினர், புத்திஜீவிகள் ஆகியோரை சந்தித்து இந்த விவகாரம் தொடர்பாக அவர்களது கருத்துக்களை கோருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சனாதிபதி உட்பட பல அமைச்சர்கள் அண்மையில் மேற்கொண்ட முக்கிய நியமனங்களில் அனேகமானவை சர்ச்சைக்குரியனவாகவே காணப்படுகின்றதென்றும் வர்ண சூரிய தெரிவித்துள்ளார்.

உயர் பதவிகளில் எவரையாவது நியமிப்பதானால் அதற்கென சுயாதீன ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்று சட்டத்தரணி ஜே.சி. ஜெலிஅமுன தெரிவித் துள்ளார். அத்துடன் அத்தகைய ஆணைக்குழுவொன்று இப்படியான நியமனங்களிற்கு ஒரு ஒழுக்காற்று அமைப்பாக செயற் படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிஸ் திணைக்கள பதவி உயர்வுகளிற்கு எதிரான விசாரணை துரதிர்ஷ்டமானது

### சிறிலங்காவின் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

பொலிஸ் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட பதவியுர்வுகளிற்கு எதிராக நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகள் துரதிர்ஷ்டவசமானதென்று சிறிலங்காவின் பிரதம நீதியரசர் சரத்என் சில்வா தெரிவித்துள்ளார்.

சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவொன்று இருக்கின்ற போதிலும் பொலிஸ் பதவியுர்வுகள் ஒரு பிரச்சனைக்குரியதாக அமைந்துள்ளன என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

2002 ஆம் ஆண்டில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்கும் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட பதவியுர்வுகளை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்று நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே பிரதம நீதியரசர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். இருதரப்பினரும் சமரசமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று பிரதமநீதியரசர் மனுதாரரிடமும் எதிர் மனுதாரரிடமும் ஆலோசனை தெரிவித்தார்.

# பொருட்கள் விலை ஏற்றத்தைத் தடுக்க பா.பா. சட்டத்தில் புதிய பிரமாணங்கள்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதை தடுப்பதற்காக பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் புதிய பிரமாணங்கள் சேர்த்துக் கொள்ளப்படுமென்று வர்த்தக பாவனையாளர் விவகாரஅமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். புதிய பிரமாணங்களின் விலைகளை அதிகரிக்கும் வர்த்தகர்களுக கெதிராக அதிகாரிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதோடு அவர்கள் மீது அபராதம் விதிக்கவும், சிறைத்தண்டனை விதிக்கவும் முடியுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விஜயவிமலரட்ணவின் மனைவி சொத்துக்களைப் பெற முயற்சி

(கொழும்பு)

1995- ஒகஸ்ட் 8 ஆம் திகதி அராலியில் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணவின் சொத்துக்களை நிர்வகிக்க உத்தரவு கோரி அவரது மனைவி நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

மானெல் விமலரட்ண என்ற இப் பெண்மணி மறைந்த தனது கணவனின் முப்பத்தைந்து லட்சம் ரூபாய்க்ள் பெறுமதியான சொத்துகளிற்கு தானும் தனது இரண்டு பிள்ளைகளுமே ஒரே உரிமையாளர்கள் என்றும் அவற்றை நிர்வகிப்பதற்கு அனுமதிவழங்க வேண்டும் என்றும் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

# சிறில. புலனாய்வு அதிகாரி ஓய்வு பெறப்போவதாக கடிதம்

(கொழும்பு)

சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் தனது சேவையில் இருந்து ஓய்வு பெறப்போவதாகக் கோரி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவிடம் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

பிரிகேடியர் கபில் ஹெந்தவிதாரண என்ற இவ்வதிகாரி கருணாவிற்கு உதவி புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்தும் தனக்கு கீழ் நிலையிலுள்ள அதிகாரிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டதற்கு எதிர்ப்புத்தெரிவித்தும் இந்த ஓய்வு கோரிய கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இவர் சிறிலங்காவின் ஆயுதப் படைகளில் மிக நீண்ட கால இராணுவ புலனாய்வு அதிகாரியாக சேவையாற்றியவருமாவார்.

# போட்டியின்றி தெரிவு

ஊவா மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மானெல ரட்ணாயக்க சபைத் தலைவராகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் விஜய் விஸ்வநாதன் உப தலைவராகவும், போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.நேற்று முன்தினம் பதுளையில் சபை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றுள்ளது.

# உசன் பகுதி முகாமை மூடி படையினரை உடனடியாக வெளியேற்றும் சாத்தியமில்லை

## பிரதேச செயலருக்கு படைத்தரப்பு கடிதம்

தென்மராட்சி முன்னரங்கப் பாதுகாப்பு நிலையப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுத் தலைமையகம் அமைந்துள்ள உசன் பகுதியிலிருந்து தமது முகாமை மூடி படையினரை வெளியேற்றுவது உடனடியாகச் சாத்தியமில்லையெனப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இப்பகுதியில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்களை விடுவிக்கக்கோரியும், இல்லாவிடின் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை மூடி தொடர் மறியல் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அப்பகுதி பொது அமைப்புக்கள் அறிவித்திருந்தன.

இந்நிலையில் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் 55ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேற்படி பகுதியிலிருந்து படையினரை வாபஸ் பெறுவதில்லையென்ற முடிவை தென்மராட்சி பிரதேச செயலரிற்கு அறிவித்துள்ளார்.

இப்போதைய நிலையில் பாதுகாப்பானதும் வசதியானதுமான இடத்தைத் தெரிவுசெய்ய முடியாதிருப்பதாகக் கூறியே முகாமை இடமாற்றஞ் செய்ய முடியாதிருப்பதாகத் தமக்குக் குறித்த இராணுவ அதிகாரி கடிதம் மூலம் அறிவித்திருப்பதாக தென்மராட்சி பிரதேச செயலர் க.ஸ்ரீநிவாஸன் தெரிவித்திருந்தார்.

நாளை முதல் பிரதேச செயலகம் முன்பாகத் திட்டமிட்ட வகையில் மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகப் பொதுஅமைப்புகள் அறிவித்துள்ளபோதும் படைத்தரப்பு தமது முடிவை மாற்றிக்கொண்டதாக எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையெனவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (27)

# மட்டு. சித்தாண்டிப்பகுதியில் பெண் ஒருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப் பகுதியில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரி.56 துப்பாக்கியின் வெற்று ரவைகள் 16உடன் உயிர்ப்பான ரவைகள் இரண்டும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. கருணா அணியினருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் தொடர்புகள் இருந்ததாகவும் இதன் காரணமாகவே இந்தக் கொலை நடந்திருக்கலாமென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தில் தொடர்ச்சியாக படையினர் பயிற்சி

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் படையினருக்கான பயிற்சிகள் இரவு பகலாக நடாத்தப்படுவதாக அயல்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தொண்டமனாறு மற்றும் மயிலந்தனை ஆகிய கிராமங்களிற்கு அண்மித்ததாக உள்ள உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளிலேயே இப்பயிற்சிகள் இடம்பெறுவதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் பராவெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்படுவதாகவும் இதனால் மீனவர்களிடையேதொழிலுக்குச் செல்வதில் அச்சநிலை தோன்றியிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது. (27)

# குரங்குபாஞ்சானில் விவசாயத்திற்கு விடுதலைப்புலிகள் அனுமதி

(திருகோணமலை)

குரங்குபாஞ்சான் விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான வயல் நிலங்களில் எவ்வித கட்டுப்பாடுமின்றிச் சுதந்திரமாக விவசாயம் செய்யவும், பள்ளிவாசலைப் புனரமைப்புச் செய்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும் பூரண அனுமதி அளிப்பதாக திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனுக்கும் கிண்ணியா ஜமியாத் உலமாசபை செயலாளர் மௌலவி எம்.வை.ஹதியதுல்லாவுக்கும் குரங்குபாஞ்சானில் நேற்று சனிக்கிழமை பகல் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

காய்ந்த விறகு வெட்டுவதற்கு ஒரு வண்டில் விறகுக்கு 50ரூபா கட்டணம் செலுத்தி அனுமதி வழங்கப்படும்.

ஏனைய மரங்கள் வெட்டிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவது பற்றி விரைவில் உலமாசபைக்கு அறிவிக்கப்படும்.

பிரதான வீதியைப் புனரமைப்பதற்கும் பாவிப்பதற்கும் பூரண அனுமதி வழங்கப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் காவல் குடில்களை அமைத்துக்கொள்வதற்கும் பூரண அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் விடுதலைப்புலிகளின் முகாமிற்கு 50 மீற்றர் அப்பால் இக்காவல் குடில்கள் அமைக்கப்பட வேண்டும்.

குரங்குபாஞ்சான் குளம் புனரமைப்புக்கு விடுதலைப்புலிகளினால் கட்டுப்பாடு விதிக்கப்படமாட்டாது. உரிய நிதியைப் பெற்றுக் குளத்தைப் புனரமைக்கலாம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் எழிலன் ஆரம்பத்தில் குரங்குபாஞ்சான் குளம் பிரதேச விவசாயிகள் மத்தியில் உரை நிகழ்த்தியிருந்தார். (27)

# நாட்டு மக்களின் சுபீட்சம் கருதி புதிய அரசியலமைப்பு அவசியம்

## அமைச்சர் சி.பீ.ரட்ணாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களின் சுபீட்சத்தை கருதி புதிய அரசியலமைப்பை அமுல்செய்ய வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது

பாராளுமன்றத்தில் காணப்படும் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை என்ற நிலைமை காரணமாக அதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு துறை அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே இதனை சாத்தியப்படுத்துவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்தால் தமது அமைச்சுப்பதவியை தியாகம் செய்யவும் தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

கண்டிப் பிரதேச செயலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், எந்த அரசாங்கம் வந்தாலும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியில் 50 வீதம் கிராமப் பகுதிக்கு சென்று சேர்வதில்லை எனக் குறிப்பிட்டார். தற்போதைய மாவட்ட மட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மக்களுக்கு நெருக்கமில்லாத ஒன்றாகும். இதனைக் கொண்டு நாட்டில் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது. எனவே 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலுக்கு பதிலாக புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவது அவசியம் என சி .பி. ரட்ணாயக்க தெரிவித்தார். (32)

# தேசிய எழுச்சிப்பேரவை செயலகம் திறப்புவிழா

நாளை காலை 10.00 மணியளவில்,தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பணியகம் சாவகச்சேரி கந்தையா வீதியில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. தென்மராட்சிக் கோட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ள சமூக,பொருளாதார அபிவிருத்தி,புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு மையமாகச் செயலாற்றவுள்ள இப்பணியகத்தின் திறப்பு விழாவில், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# சனாதிபதி சந்திரிகா தலைமையில் குழு நிருபம் சென்னுடன் இரகசியச் சந்திப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான குழுவினருக்கும் இந்தியத் தூதுவர் நிருபம்சென்னுக்கும் இடையே இரகசியச் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக லங்காதீப சிங்கள நாளிதழ் தெரிவிக்கின்றது.

கடந்த புதன்கிழமை இரவு பிரபல அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐந்து மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் அநுராபண்டாரநாயக்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சிங்கப்பூருக்குப் பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சிங்கப்பூருக்குப் பயணமாகியுள்ளார்

அவருடன் சபாநாயகர் லொக்குபண்டார, ஜி.எல் பீரிஸ் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் சிங்கபூருக்குச் சென்றுள்ளனர். அவர்களின் விஜய நோக்கம் உடனடியாக தெரியவராத போதிலும் சிங்கபூரில் முன்னாள் முதலீட்டுச் சபைத்தலைவர் அர்ஜுன் மகேந்திரனை சந்திக்க வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விஜயம் தனிப்பட்ட விஜயம் என எதிர்க்கட்சித்தலைவர்அலுவலகம் தெரிவித்துள்ளது.(32)

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வேக்கு சனாதிபதி கடிதம்

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நோர்வேத் தரப்புக்குஅவசரஇராஜதந்திர தகவலொன்றை அனுப்பியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி பதவியிலிருந்து விலகிய பின்னர் இந்தத் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை மையமாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பிலேயே இந்தத் தகவல் அனுப்பட்டுள்ளதாகவும், அந்தத் தகவலை நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ்பிரான்ஸ்கர் நோர்வேக்கு எடுத்துச்சென்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்தத் தகவல் தொடர்பில் நோர்வே ஏற்பாட்டாளர்களின் பதிலை எதிர்பார்ப்பதாகவும், அரசாங்கத்தின் சமாதான செயலக இயக்குனர் ஜெயந்த தனபால தெரிவித்துள்ளார். (32)

## படையினரால்...

பயணம் செய்யமுடியும். எட்டுப் பேரும் செல்வதற்கு தம்மால் அனுமதிக்க முடியாது எனவும் இது பற்றி தமது மேலதிகாரிகள் தமக்கு அனுமதி வழங்கும் வரை பயணம் செய்ய அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

இவ்விடயம் சம்பந்தமாக உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இராணுவ மேலதிகாரிகளின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் அவர்கள் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதன் காரணமாக நேற்று குரங்குபாஞ்சான் முகாமில் கிண்ணியா முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 9.00 மணிக்கு நிகழவிருந்த சந்திப்பு இரு மணிநேரத்தின் பின்னரே ஆரம்பமானது. (32)

## இடைக்கால...

மைப்பு அரசு இரகசிய முடிவுகளை எடுத்துள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. இத்தகைய இடைக்கால நிர்வாக அலகொன்றை அரசு தயாரித்து வருகின்றதா என்று சிறிலங்காவின் ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவைக் கேட்ட போது, அதை ஒத்துக்கொண்ட அமைச்சர், அரசு தயாரிக்கும் இந்த இடைக்கால நிர்வாக அலகு வடக்கு- கிழக்கிற்கான புனர்நிர்மாணப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், நிரந்தரத் தீர்வு குறித்து அதிக கவனம் எடுக்குமென்றும் தெரிவித்துள்ளார்.

## ஜேர்மனில்...

இவ்வாறாக பல அமைப்புக்கள் சங்கங்கள் ஊடாக தமிழுக்காகவும் தேசிய போராட்டத்திற்காகவும் இவரது பணி தொடர்ந்தது.

1990ஆம் ஆண்டு உலகத் தமிழர் இயக்கம் தோற்றம் பெற்றது. இது ஜேர்மன் அரசிலும் பதிவு செய்யப்பட்டது. இதில் இரா.நாகலிங்கம் தமிழ்க்கல்விப் பணிமனையின் பொறுப்பாளராக இருந்து தமிழ்மொழிக்குப் பணியாற்றினார். இதே ஆண்டிலேயே ஜேர்மன் யூக்ஸன் நகரில் தமிழ் ஆலயம் உருவாக்கப்பட்டது. இதில் தமிழ் கற்கும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.தமிழ் ஆலயங்களும் பிறப்பெடுத்தன. இரா. நாகலிங்கம் தமிழுக்காக ஆற்றிவரும் பணியில் இவருக்கு பக்கபலமாக நின்று தானும் பணியாற்றி வரும் இவரது துணைவியாரின் பங்களிப்பும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இன்று இவ்வமைப்புக்கள் வளர்ந்து வரும் ஜேர்மன் நாட்டில் 123 தமிழாலயங்களும் 6000 மாணவர்களும் உள்ளனர். இவர்களுக்கான ஆசிரியர்களாக 650 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதோடு இவற்றினை நிர்வகிக்கும் பணியில் 350 பேர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈடுபட்டிருந்த...

நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மாணவியை மோட்டார் சைக்கிளால் மோதிய இளைஞனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் - விளக்கமறியலில் வைக்க யாழ்.மேலதிக நீதி வான் திருமதி.ஸ்ரீநிதி நந்த சேகரன் உத்தரவிட்டுள்ளார். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 08 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.